
"இளங்கீரன்"

# பட்டினித் தோட்டம்



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**


**சத்தி பதிப்பகம்**

14-எ, குப்பையர் தெரு

சென்னை—1



காமராசர் பல்கலை
அவ்வை
தி.க. சண்முகம் நூல

முதற்பதிப்பு—ஏப்ரல்—1953

உரிமைபெற்றது

விலை ரூபா ஒன்று

முத்துக்குமரன் பிரஸ், சென்னை–1

# முன்னுரை

**இன்றைய** சமுதாயத்தின் விபரீதமான அமைப்பை எடுத்துக்காட்டும் உருவகக் கதைதான் "**பட்டினித் தோட்டம்**'

**இந்த** விபரீத அமைப்பு இரண்டுவித வாழ்க்கை முறைகளை—எதிர்மாறுன வாழ்க்கை முறைகளை—உற்பத்தி செய்து மக்களிடம் கொடுத்திருக்கிறது. இவை இரண்டின் முழு உருவங்கள் தான் குபேரபுரியும், குடிசையூரும் இவை இரண்டின் பிரதிபலிப்புத்தான் பணத் தோட்டமும், பட்டினித் தோட்டமும். இவை எப்படியிருக்கின்றன என்பதை இக்கதையில் பார்க்கலாம்.

**நாவலையோ,** சம்பவ அடுக்குகளைக்கொண்ட நீண்ட கதையையோ படிப்பதைப்போன்று, இதைப்படித்து முடித்து விடவேண்டாம், அமைதியாக — ஆழ்ந்து — படியுங்கள். அப்போதுதான் இக்கதையின் முழு உருவமும்—கருத்தும்—பளிச்செனத் தெரியும்.

**இலக்கியத்** துறையிலே உருவகக் கதைக்கும் இடம் உண்டு. விரைந்து முன்னேறும் புதுமை, இலக்கியத்தின்—மக்கள் இலக்கியத்தின்—பண்பாட்டை உருவகக் கதையிலும் காட்டமுடியுமென்பதற்கு இந்த ஏடு ஒரு சான்ருகும்.

**இக்கதை 'திராவிடன்'** இதழில் ஏற்கனவே வெளி வந்தது. இதை நூல் வடிவில் வெளியிட **சத்தி பிரசுரத்** தார் விரும்பினுர்கள். அதன் விளைவு, உங்கள் கரங்களில் இப்புத்தகம் தவழுகிறது. வணக்கம்.

**இளங்கீரன்**

## ஆசிரியரின் இதர நூல்கள்

1 ஒரே அணைப்பு
2 கலாராணி
3 காதல் உலகிலே
4 அழகு ரோஜா

# பட்டினித் தோட்டம்

குபேரபுரி, அழகான நகரம் மட்டுமல்ல, ஆனந்த மாகப் பொழுது போக்குவதற்கும் ஏற்றதான ஒரு பரவசச் சோலை. இக் குபேரபுரியைப் பற்றியும், அங்கே வாழும் மக்களைப் பற்றியும் வர்ணனைகள் அன்றுடம் அவனி மக்களின் நாவில் வந்துகொண்டே யிருக்கும்.

குபேரபுரி வாசிகளுக்கு இந்த உலகக் கவலையே கிடையாது. அடுத்த நகரங்களைப் பற்றியோ ஊர் களைப் பற்றியோ குபேரபுரி வாசிகளுக்கு அக்கறை யில்லை. அங்கே வாழும் மக்களைப் பற்றித் துளியும் நினைத்துப் பார்க்கமாட்டார்கள். ஆனல் தங்கள் நக ரத்தில் கவனத்தை முழுதும் செலுத்தி, வாழ்க்கை யின் விதவிதமான இன்பச் சுவைகளை ருசி பார்த்துக் கொண்டே யிருப்பார்கள்.

குபேரபுரியின் ஆனந்த ஊற்று அடைக்கப்பட வில்லை. இன்ப ஆறு ஓடிக்கொண்டே யிருந்தது. சந்தோஷத்தை அணைத்துப் பிடித்துக்கொண்டு ஆட லும் பாடலுமாக இருந்தார்கள் குபேரபுரி வாசிகள். அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் திருவிழா! வாழ்க்கை! பல்சுவை விருந்து! ஒரே கொண்டாட்டந்தான்!

குபேரபுரியின் உயர்வுக்கும் அங்கே குடியிருப் போரின் மகிழ்ச்சிக்கும் முக்கிய காரணம் அதன் நடுவே அமைந்திருக்கும் பூங்காதான். அதைப் **பணத்தோட்டம்** என்றே குபேர புரியினர் அழைத் தார்கள். இதில் விசித்திர மென்னவென்றால் குபேர புரிக்கு வெளியே உள்ளவர்களும் அப்பூங்காவைப் **'பணத்தோட்டம்'** என்றே அழைத்து வந்தார்கள்.

குபேரபுரியின் இப் பணத்தோட்டம் உலகப் பிர சித்திப் பெற்றது. குவலய மக்களின் கருத்தைக் கவர்ந்தது. 'பணத்தோட்டம்' என்ற உடனேயே பல்லை வெளியே காட்டிக் கொண்டு பரவசத்துடன் துள்ளிக் குதிப்பார்கள் மக்கள்! உண்மையைக் கூறப் போனால் இந்தப் பணத்தோட்டத்தால் தான் குபேர புரியின் புகழ் புவியெங்கும் பொங்கி வழிந்தது. குபேர புரியை நோக்கிக் குவலய மக்கள் அனைவரும் மண்டி யிட்டுத் தொழுது கொண்டிருந்தார்க ளென்றால் அதற்கு மூல காரணமே இந்தப் பணத்தோட்டந் தான்.

இப் பணத்தோட்டத்தின் நடுவே சிங்காரமான வேலைப்பாடமைந்த ஒரு கட்டடம் இருந்தது. இக் கட்டடத்தின் மேற்கூரை தட்டையாக இருந்தது. அதன் மேல் ஒரு வெண்கலச் சிலை. அதன் கையிலே **செல்வக்கொடி** பறந்து கொண்டிருந்தது. தகதக என்று மின்னும் தங்க தகட்டைப்போல இருந்தது அது. நீல வானத்தை நோக்கி பறந்து கொண்டிருந்த அந்தக் கொடியிலே சிங்காரம் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது. குபேரபுரிக்கு நூற்றுக் கணக்கான

மைல்களுக் கப்பாலிருந்து பார்த்தாலும் அக்கொடி பறந்து கொண்டிருப்பது தெரியும். இதை நினைத்துத் தானே என்னவோ, அக்கொடிக்கு ஒரே பெருமை, பூரிப்பு, கர்வம், எக்களிப்பு!

* * *

எங்கேயோ சுற்றிக்கொண்டிருந்த பசியப்பன் அன்றுதான் குடிசையூருக்கு வந்தான். அவனுக்குச் சோர்வுதட்டி யிருந்தது அப்போது. அலைந்து திரிந்த தன் விளைவு போலும்!

வெகுநாட்களாகக் குடிசையூரை விட்டுப் பிரிந் திருந்த பசியப்பனுக்கு, ஊரை ஒருமுறை சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எழுந்தது. ஆனால் சோர்வு விடமாட்டேன் என்றது. 'கம்பத்தில் பறக்க விட்டோமே கொடி, அதையாவது எப்படி யிருக்கிற தென்று பார்ப்போம்' என்று எண்ணியவனாய், குடிசையூரின் நடுவே யிருந்த பட்டினித்தோட்டத்தை நோக்கி நடந்தான்.

உச்சி வெயில்! மண்டையில் ஓடும் ரத்தமெல்லாம் கொதிப்பது போன்றிருந்தது. நிலத்திலே கால் வைத்து நடக்க முடியவில்லை. தணலாயிருந்தது. ஆனால் கொடியை எப்படியாவது பாத்துவிட வேண் டும் என்ற எண்ணம் பசியப்பனை இழுத்துச் சென்றது.

பட்டினித் தோட்டத்திலே பலர் படுத்துக் கிடந் தார்கள். இன்னும் பலர், எதை எதையோ எண்ணிக் கொண்டு பெருமூச்சை வெளியே விட்ட வண்ணம்

இருந்தனர். தரையில் புற்கள் இல்லை, புழுதி மண் தான் இருந்தது. அங்கேயிருந்த பஞ்சச் செடிகள் மட்டும் செழிப்பாக இருந்தன. கண்ணீர் ஓடை வழக்கம் போல் ஓடிக் கொண்டிருந்தது. ஒரு பகுதியிலிருந்து முணு முணுப்புக் கீதம் காற்றுடன் வந்து கொண்டிருந்தது. இன்னொரு மூலையில் பல குழந்தைகள் அழுகைக் குரலெடுத்துப் பாடிக் கொண்டிருந்தன. இன்னொரு பகுதியில் சோக வீணையை மீட்டிக் கொண்டிருந்தனர் பலர். வேதனை நாட்டியமாடிக் கொண்டிருந்தது அங்கே.

தோட்டத்துக்குள் சென்ற பசியப்பன் இக்காட்சிகளை யெல்லாம் பார்த்து சலித்தவன்; இவைகளில் பழக்கப்பட்டவன்; கண்ணீர் ஓடையிலே நீந்தி நீந்தி அலுத்தவன்; அதன் அழகை ரசித்து ரசித்துத் திகட்டியவன்; பொதுவாக, பட்டினித் தோட்டத்தின் காட்சிகளெல்லாம் அவனுக்குப் பழையன. எனவே அவைகளை யெல்லாம் கவனிக்காது அங்கேயிருந்த ஒரு பிரமாண்டமான இரும்புக் கோட்டையை நோக்கி விரைந்தான்.

பல மாடிகள் கொண்ட அக்கோட்டையின் உயரம், அண்ணார்ந்து பார்த்தால் கழுத்து விறைக்கும் அளவில் இருந்தது. அக்கோட்டையின் கூரையிலே கொடி ஒன்று பறந்து கொண்டிருந்தது!

பசியப்பன் சில விஞடிகள் அக் கோட்டையைப் பார்த்துக்கொண்டு நின்றான். அது அதிக உயரத்தில் பறந்து கொண்டிருந்ததால் கண்களுக்குச் சிறியதாகத் தோன்றியது. பசியப்பன் எதையோ யோசித்

தவன் போல் சடேரென அந்த இரும்பு கோட்டைக்குள் நுழைந்தான். அக் கோட்டையின் மேல்மாடிக்குச் செல்லும் படிக்கட்டுக்கள் வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்தன. பசியப்பன் ஒவ்வொரு படியாகத் தாண்டி கடைசி மாடிக்கு வந்து கூரையின் முகப்பில் ஏறினன்.

வட்ட நாணயம் போன்று பல இரும்பாலான பெரிய அடுக்குகள் அக்கூரையின்மேல் வைக்கப்பட்டு அதன்மீது ஒரு கம்பம் நிறுத்தப்பட்டு அதன் உச்சியில் அக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது. அக் கம்பத்தின் சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. பசியப்பனின் கண்கள் அந்த எழுத்துக்களை ஒரு முறை நோக்கின. அந்த எழுத்துக்களை அவன் அறிவானனலும் இன்னெரு முறை அதைப்படிக்க வேண்டும் போலிருந்தது. மெதுவாகப் படித்தான்.

"குடிசையூரின் நடுவே இருக்கும் இப்பட்டினித் தோட்டத்தின் புகழையும், பெருமையும் அவனியெங்கும் அறிவிப்பதற் கறிகுறியான இந்த வறுமைக் கொடியை இந்த இரும்பாலான துன்பக் கோட்டையின் மீது பறக்கவிட்டவர், குபேரபுரி ஆட்சி மன்றத்தின் அமைப்பாளரும், அதன் அமைச்சருமான கனம். முதலாளித்துவ முதலியார் அவர்களாகும். அன்னருக்கு, இக் குடிசையூர் வாசிகளின் வேதனை கலந்த வெறுப்பு எப்போதும் உண்டு!"

இதைப் படித்து முடித்ததும் பார்வையை எதிரே செலுத்தினன். அங்கே செல்வக் கொடி பறந்து கொண்டிருந்தது. அக்கொடி எவ்வளவு உயரத்தின்

பறந்து கொண்டிருந்ததோ, அதே உயரத்தில், வறுமைக் கொடியும் பறப்பதைக் கண்ட பசியப்பனுக்கு, உள்ளூரப் பெருமையா யிருந்தாலும், வருத்தமாகவு மிருந்தது ! ஏனோ ?

குபேரபுரிப் பணத் தோட்டத்திலே பறக்கும் அந்தச் செல்வக்கொடியைப் பார்க்குந்தோறும், பசியப்பனுக்கு வருத்தம் மேலிட்டாலும், அப்பணத் தோட்டத்தையும், குபேரபுரியையும் என்றைக்காவது ஒரு நாள் போய்ப் பார்த்துவிட வேண்டுமென்ற எண்ணம் தோன்றும், அதே நினைவுதான் இன்றும் எழுந்தது. "நாளைக்கு, நிச்சயமாகக் குபேரபுரிக்குப் போய் ஆக வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டான்.

* * *

அடுத்த நாள், பசியப்பன் குபேரபுரியை அடையும்போது, மணி நான்கு இருக்கும். சூரியனின் பொன் சிரிப்புக் குபேரபுரியின் மேல் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது. குபேரபுரியே பொன் போன்று மின்னிக் கொண்டிருந்தது அதன் கவர்ச்சி பசியப்பனின் கண்களைப் பறித்தது. குடிசையூரிலேயும் இந்தச் சூரியனின் பொன் சிரிப்பு விழத்தான் செய்கிறது. ஆனால் இப்படிக் கண்ணையும் கவரும் முறையில் இல்லை. என்று நினைத்துக் கொண்டே குபேரபுரியின் வாசலைத் தாண்டினான்.

"ஏய், எங்கே போகிறாய் ?"—என்ற கேள்வி காதில் வந்து தாக்கியதும் திடுக்கிட்டு முகத்தைத் தூக்கினான். கேட்டின் எதிரே காவல்காரனை தரகன் நின்று கொண்டிருந்தான்.

"ஓஹோ, இவன்தான் காவல்காரனு....!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டே, "குபேரபுரியைப் பார்க்கப் போகிறேன்." என்றான் பசியப்பன்.

தரகன், பசியப்பனை ஏற இறங்கப் பார்த்தான். கிழிந்த ஆடை பரட்டைத் தலை, குழிவிழுந்த கண்கள் ஒட்டிய வயிறு, குச்சிபோன்ற கை கால்கள் இத் தோற்றத்துடன் நின்ற பசியப்பனைக் கண்டதும் ஓ! குடிசையூர் பேர்வழியா என்று தன்னுள் கேட்ட வாறே தன்னையே ஒரு முறை பார்த்துக் கொண்டான் அப்போது அவன் கண்களில் பெருமிதம் மிதந்து கொண்டிருந்தது. உண்மையைச் சொல்லப்போனால் பூதக் கண்ணுடி கொண்டு பார்த்தாலும் பசியப்பனைப் போன்ற பிறவியைக் குபேரபுரியில் காணமுடியாது. வலை போட்டு அரித்தாலும் இப்படிப் பட்டவன் அகப் படுவது அரிது. அங்கே அப்படிப்பட்ட குபேரபுரி யில் இருந்த தரகனுக்கு பசியப்பனையும் தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்து பெருமிதம் கொண்டதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது.

பசியப்பன் அவனையே பார்த்துக்கொண்டு நின்றான். தரகன் கல கலவென்று சிரித்து விட்டான்.

பசியப்பனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை!

"ஏன் அண்ணே சிரிக்கிறே?"

தரகன் சிரிப்பை அடக்கிவிட்டு மிடுக்காக அவனைப் பார்த்தான்.

"உன்னையெல்லாம் குபேர புரிக்குள் விடமுடியாது. குபேர புரியைப் பார்க்க வந்தாராம்—ஆளைப் பாரு!"

"ஏன் நான் நகரத்துக்குள்ளே போகக்கூடாதா?"

"போகக்கூடாது! உன்னைக்கண்டதும் நகரத்துச் சனங்கள் பார்த்துப் பயந்து மூர்ச்சித்து விழுந்து விடுவார்கள். அவர்கள் மூர்ச்சித்து விழுவதாயிருந்தால் அதென்ன விளையாட்டான விஷயமா? அவர்கள் விழக்காரணமாயிருந்த உன்னை உள்ளே விட்டதற்காக என் உத்தியோகமே காலியாகிவிடும்!"

தரகன் சொன்ன வார்த்தைகளைக்கேட்ட பசியப்பனுக்கு வியப்பு மேலிட்டது, என்னைக் கண்டாலே மூர்ச்சித்து விடுவார்களாமே! இந்தப் பட்டணத்து ஜனங்கள் விசித்திர மானவர்களோ....என்று எண்ணினான். எனினும் எப்படியாவது குபேரபுரிக்குள் சென்று விடவேண்டும் என்ற ஆவல் அவனைப் பிடித்திழுத்தது.

"அண்ணே, நான் வெகு தூரத்திலிருந்து வர்ரேன். குபேரபுரியைப் பார்க்க வேணும்னு வெகு நாள் ஆசை. ஆகவே........!"

"ஊஹூம்! அதெல்லாம் முடியாது, போ போ........!"

"என்னங்க இப்படி அடிச்சு விரட்டிறீங்க! எங்க ஊரிலே இப்படி விரட்டமாட்டாங்க. கட்டுக் காவலு ஒண்ணும் கிடையாது. யாரு வேணும்னாலும், எந்த நேரத்திலேயும் தாராளமாக ஊருக்குள் நுழையலாம். அப்படியிருக்க, உங்க......."

இதற்குள் குறுக்கிட்டான் தரகன்.

"குடிசையூரைத்தானே சொல்கிறாய்? அதற்கு 'பாஸ்போர்ட்' தேவையேயில்லை! ஏன் தெரியுமா? உங்க ஊர் இருக்கிறதே, அது ஒரு இருண்ட சமுத்திரம்!"

தரகனுடைய வாயிலிருந்து கிண்டலும் கேலியும் கலந்து உருண்ட இவ்வார்த்தைகளைக் கண்ட பசியப்பனுக்கு, ஆத்திரம் அலறிக்கொண்டு வந்தது. எனினும் அதை அடக்கிக்கொண்டே கேட்டான்.

"அப்ப, உங்க குபேரபுரி மட்டும்?"

"சரிதான் போ! எங்க குபேரபுரியும் பணத் தோட்டமும், அதன் அழகும், அங்கே யிருக்கும் சிங்காரக் கோட்டை, அதன்மேல் பறக்கும் செல்வக் கொடியும்........! ஹூம். உன் மண்டையிருக்கிறதே அதனுள் ஏதும்....... என்ன விழிக்கிறாய்! குபேரபுரிக்கும் குடிசையூருக்கும் முடிச்சுப் போட்டுப் பார்க்கிறாயோ? பேசாமல் வந்த வழியைப் பார்த்து நட!"

"நான் குபேரபுரியைப் பார்க்கத்தான் வேண்டும். இந்த ஒரு முறை மட்டும்........!"

"அடச் சனியனே! அந்தப் பேச்சை மட்டும் விட்டுவிடு."

பசியப்பனுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை அவனால். தரகனைப் பார்த்தால் 'மொளு மொளுன்னு ஆறடி உயரத்திலே நாற்பது அங்குல அகலத்திலே முறுக்கு மீசையுடன் நிற்கிறான். தானோ.......!

'என்ன செய்யலாம்?' என்று யோசித்தவாறே அவனை விட்டு அகன்று அப்பாலே சென்ருன். குபேரபுரியைச் சுற்றி ஏவல் சுவர் மதிலாகக் கட்டப்பட்டிருந்தது. நான்கு புக்கமும் உள்ளே போகும் வாசல்கள் இருந்தன. ஆனல் ஒவ்வொன்றிலும் காவல்காரர்களான தரகர்கள் இருந்தார்கள். பசியப்பன் எல்லோரிடமும் கேட்டான் தன்னை உள்ளே விடும்படி. எல்லோரும் முதல் தரகனைப் போன்றே பதில் சொல்லி விட்டார்கள். பசியப்பனுக்கோ, எப்படியாவது குபேரபுரிக்குள் நுழைந்து அதைச் சுற்றிப் பார்ப்பதோடு எல்லோரும் வர்ணிக்கும் பணத் தோட்டத்தையும் பார்த்துவிட வேண்டுமென்ற அடங்காத ஆசையும் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது.

பலத்த ஏமாற்றத்துடனும், கவலையுடனும் மதில் சுவற்றைச் சுற்றி வந்துகொண்டிருந்த பசியப்பனுக்கு அங்கே ஒரு சிறு வாசல் தென்பட்டது. ஆனல் அந்த வாசலும் இரும்புக் கதவால் பூட்டப்பட்டிருந்தது. அதனருகே சென்று தள்ளிப் பார்த்தான். படீரென்று கதவு திறந்துகொண்டது. மெதுவாக உள்ளே சென்ருன். உட்புறத்தில் மதிலைச் சுற்றி ஒரு பெரிய வாய்க்கால் ஓடிக் கொண்டிருந்தது. அந்த வாய்க்காலை வருடத்துக் கொருமுறை சுத்தப் படுத்துவதற்காகத் தான் அந்தச் சிறு கதவு அமைக்கப்பட்டிருந்தது.

கதவைச் சாத்திவிட்டு உள்ளே சென்ற பசியப்பன் அங்கே நின்ற மரத்தடியில் போய் உட்கார்ந்தான். களைப்பு! பாவம் அப்படியே சோர்ந்து உட்கார்ந்து விட்டான்.

திடீரென்று அவன் மூக்கை எதுவோ வந்து தாக்கிற்று. அது ஒரு இனிய மணம். அம்மாதிரி மணத்தை—வாசனையை இதற்குமுன் அவன் முகர்ந்ததே கிடையாது. எனவே திகைப்புடன், எங்கிருந்து வருகிறது என்று சுற்றுமுற்றும் பார்த்தான். மதிலைச் சுற்றி ஓடும் அந்த வாய்க்காலண்டை சென்று பார்த்தான். மணம் மூக்கைத் துளைத்தது.

குபேரபுரி வாசிகள் அராபிய அத்தர் கலந்த பன்னீரில்தான் குளிப்பார்கள். குளிக்கும் அறையிலிருந்து குழாய் மூலமாகக் கொட்டும் பன்னீர்தான் இந்த வாய்க்காலில் ஓடுவது. இதை யறியமாட்டான் பசியப்பன். ஆகவே, பிரமிப்புடன் அந்த வாய்க்காலிலிருந்து வந்த இனிமையான வாசனையை அனுபவித்த வண்ண மிருந்தான்.

இனிமையான மணத்தில் சொக்கிப் போய் அந்த வாய்க்காலையே பார்த்துக் கொண்டிருந்த பசியப்பன், அதில் மிதந்து செல்லும் பலநிற பழத் தோல்களைக் கண்டதும், துள்ளி யெழுந்து, அவைகளைப் பொறுக்கினான். அப்பழத் தோல்களெல்லாம் குபேரபுரி வாசிகளின் சுவைக்குத் தப்பியவையாகும். ஆரஞ்சு ஆப்பிள், வாழைப்பழம், திராட்சை, தொரியான், மங்குஸ்தான், ரம்புட்டான், மல்கோவா, ஆகிய ருசி மிக்கப் பழங்களைச் சுவைத்துவிட்டு அவற்றின் தோல்களைக் குப்பைத் தொட்டியில் போட்டு விடுவார்கள். அதை வேலையாட்கள், வாய்க்காலில் கொண்டுவந்து கொட்டுவார்கள். அவைகள்தான் வாய்க்காலில் மிதந்து வந்தவையாகும். பசியப்பன் அவைகளைப்

பொறுக்கி மடியில் வைத்துக்கொண்டான். அவைகள் அவனுக்குப் புதுமையாக இருந்தபடியால், தன் ஊருக்கும் கொண்டுபோய்க் காட்ட வேண்டுமென்பது அவனுடைய எண்ணம்! வாய்க்காலை விட்டு விறுவிறு என்று புறப்பட்டான் குபேரபுரியைச் சுற்றிப் பார்க்க.

வானளாவிய அலங்கார மாளிகைகள், சிறு சிறு சிங்காரச் சோலைகள் அன்னம் போன்று ஊர்ந்து செல்லும் கார்கள், அகண்ட வீதிகள் அதன் ஓரங்களிலே வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும் மரங்கள்!

பசியப்பன் பிரமித்து விட்டான் வீதிகளிலே தன்னைப்போல நடந்து வருவோர் ஒருவருமில்லையே என்று எண்ணினான். 'ஒருவேளை இந்நகரத்துச் சனங்களுக்கு நடக்கத் தெரியாதோ' என்றுகூட நினைத்தான். ஏனெனில் எல்லோரும் மோட்டாரில் ஏறிச் சென்றார்களே தவிர, ஒருவராவது நடைபாதையில் நடக்கவில்லை இது பசியப்பனுக்கு வியப்பாகத்தானே இருக்கும்!

ஒவ்வொரு வீதி வழியாக நடந்துகொண்டே இருந்தான். தான் ஒரு கனவு உலகில் இருப்பதாக அவனுடைய பிரமை. கருத்தைக் கவரும் காட்சிகள் நிறைந்து கிடந்த குபேரபுரியைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை அவனுக்கு.

நகரக் காட்சிகளை ஒருவிதமாகப் பார்த்து முடித்துக்கொண்டு, பணத்தோட்டம் இருக்கும் இடத்தைத் தேடலானான். கால்கள் அலுத்தனவே தவிர, காண முடியவில்லை பணத் தோட்டத்தை. யாரிடமாவது விசாரிக்கலா மென்றாலோ, அவனைப்போல் நடந்து

வருவோர் யாருமில்லை எங்கே யிருக்கும்—?' என்ற சிந்தனையுடன் மெல்ல மெல்ல நடந்தான்.

வர்ண வேலைப்பாட்டுடன் அழகான ஒரு நுழைவு வாசல் கண்ணுக்குத் தெரிந்தது. விரைந்து சென்றான் அங்கே.

வளைந்து, வில்போன்று இருந்தது அந்த வாசல், பளபள என்று ஜொலித்துக் கொண்டிருந்தது. பளிங்குக் கற்களாலான அந்த வாசல் அழகான சித்திரங்களால் செதுக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டு நின்றான் சில விநாடிகள். பிறகு உள்ளே போவதற்காக சுற்றுமுற்றும் பார்த்தான். அந்தப் பார்வையில் ஒரு மிரட்சி தாண்டவமாடிற்று. குபேர புரி வாசலில் நிற்கும் காவல்காரனைப்போல் இங்கு யாராவது நிற்பார்களோ என்ற பயம் அவனுக்கு, ஆனால் அந்த வாசலில் யாருமில்லை. வாசலைத் தாண்டி, பணத் தோட்டத்துக்குள் நுழைந்தான்.

மாலை நேரம் மந்தகாசத்துடன், பணத் தோட்டத்தோடு கூடிக் குலாவிக் கிடந்தது. சூரியனின் பொற்கிரணங்களின் மெல்லிய இழைகள், தென்றலின் இனிமையும், சுகந்தத்தின் வாடையும் மனதை ஆனந்தத்தில் ஆழ்த்தியது. பசியப்பன் தன் நினைவில்லாமல் பணத் தோட்டத்தைச் சுற்றிவரத் துவங்கினான்.

அங்கே ஒரு நீரோடை. அதைச் சுற்றி பளிங்குக் கற்களால் படிக்கட்டுகள் அமைக்கப்பட் டிருந்தன. அந்த நீரோடையின் முன்பக்கத்தில் ஒரு தடாகம். நீரோடையிலிருந்து தண்ணீர் தடாகத்துக்குள் விழுந்து

கொண்டிருந்தது. அத் தடாகத்தின் நடுவே வெண் கலத்தினால் ஆன அழகான பெண் சிலை ஒன்று முழந்தாளிட்டு முகத்தை மேலே தூக்கிப் பார்த்துக் கொண்டிருந்தது.

அந்த அழகான நீர்த் தடாகத்தைப் பார்க்கப் பார்க்க, பசியப்பன் மனம் ஆனந்தத்தால் துள்ளியது. இதயத்தில் ஒரு இன்பம் பொங்கிக் கொண்டிருந்தது.

பல பளிங்குப் பாவைகள் நீச்சல் அடித்துக் கொண்டும் விளையாடிக்கொண்டு மிருந்தனர். அவர்களைக் கண்கொட்டாமல் பார்த்தான் பசியப்பன். எவ்வளவு அழகான ஆரணங்குகள்! அவர்கள் மேனி, வைரம் போன்று 'டால்' அடித்தது. அவ்வளவு பளபளப்பு! கன்னங்கள் ரோஜா புஷ்பம்போன்று இருந்தன. விழிகள் அகன்று விரிந்து அழகாயிருந்தன. சிரிக்கும்போது பற்கள் முத்துப்போல தெரிந்தன. அவர்களின் பேச்சோ அவர்களின் குரலை குயிலுக்கு உவமை காட்டியது. ஆச்சர்யத்துடன் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த பசியப்பனை, அவர்களில் யாரும் காணவில்லை. தங்கள் விளையாட்டுக்களிலே மூழ்கிக் கிடந்தார்கள். பசியப்பனுக்கு அந்த இடத்தை விட்டுப் போக மனமில்லை. ஆனாலும் பார்க்கவேண்டிய இடங்கள் இன்னும் இருக்கின்றனவே, எனவே அந்த இடத்தைவிட்டு அப்பாற் சென்றான்.

அங்கு ஒரு அலங்காரமான மண்டபம். ஒரு அழகி நடனமாடிக் கொண்டிருந்தாள். அவள் மாந்தளிர் மேனியை அணைத்துப் பிடித்துக்கொண்டிருந்த காட்டிய அணிகள், மனதைக் கவ்வி இழுத்தன.

கவர்ச்சியின் மின்னலிலே மிதந்து கொண்டிருந்த அவள் மேனிக்கு அந்த உடைகள் ஒரு விளம்பரம்! அவள் மார்பகம் தனித் தனியே எடுத்துக் காட்டப்படும் முறையில் ஜாக்கட்டின் வேலைப்பாடு இருந்தது.

அவள் ஆடிக் கொண்டிருந்தாள். அந்த ஆட்டம் மனதை மயக்கும் ஒரு மருந்து! அந்தப் பொற்கொடியின் இடை, மின்னல்போல் வெட்டியது. விழிகள் விளையாடின; வேடிக்கை செய்தன; விநோதம் புரிந்தன. புன்னகையை இதழ்களுக்குள் புதைத்து வைத்துக்கொண்டு புத்தியின் போக்கை வேறு பாதைக்குத் திருப்பிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஆட்டத்தின் சூட்டில், சிகரத்தினில் ஏறிஇறங்கும்போது,அவள் மார்பகங்கள் விம்மி மேலெழும்புவதும் அங்குமிங்கும் தளர்வதும், தவழுவதும் விழிகள் மோகன பார்வையை மின்னல்போல் சிதற விடுவதும், அதைப் பார்த்து அங்கிருந்தவர்கள் சபாஷ் ஆஹா......! நேர்த்தி! வெகு நேர்த்தி! என்று பல்லைக் காட்டிக்கொண்டு நாக்கைச் சப்புக் கொட்டுவதும் ஒரு அரிய காட்சியாக இருந்தது பசியப்பனுக்கு. மற்றொரு இடத்தில் ஒரு கோமளாங்கி பாடிக் கொண்டிருந்தாள். அவள் குரல் வீணையின் நாதம்போல் இழைந்தது. பலர் அந்த இசையில் தங்களை இணைத்து நினைவிழுந்திருந்தனர். பசியப்பனுக்கு அந்த இடத்தை விட்டுப் போக மனமில்லாதவனாய் ஏக்கத்துடன் அடி எடுத்து வைத்தான். இன்னும் பார்க்கவேண்டிய காட்சிகள் அநேகம் இருக்கின்றனவே!

அங்கே ஓர் விருந்து மண்டபம், பல ஆடவர்களும் பெண்களும் உல்லாசமாக பேசிச் சிரித்துக்கொண்டு

சாப்பிட்ட வண்ண மிருந்தனர். வெள்ளியால் செய்யப் பட்ட மேஜைகளிலே, தங்கத் தட்டுகள் பரப்பப்பட்டு, அவைகளிலே விதவிதமான பழவகைகள் குவிக்கப் பட்டிருந்தன. அப்பழங்களின் தோல்களைக் கண்ட பசியப்பனுக்கு, வாய்க்காலில் பொறுக்கிய பழத்தோல் களின் நினைவு வந்தது. மடியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்!

தங்கத் தட்டுகளில் பரப்பப்பட்டிருந்த பழவகை களும் பட்சணவகைகளும் பசியப்பனின் நாவில் நீரை ஊற்றெடுக்கச் செய்தன. நாவினால் உதடுகளை நனைத் துக் கொண்டான்!

பழங்கள் கொண்ட அத்தட்டுகளின் அருகில் பொற்கிண்ணங்கள் இருந்தன. அவைகளில் என்ன இருக்குமோ என்று எண்ணினான் பசியப்பன். அவனை அங்கிருந்தவர்கள் யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. இரத்தினங்களிழைத்த மோதிரங்களுக் குள் புகுந்திருந்த தங்கள் விரல்களால் பழங்களையும் பட்சணங்களையும் எடுத்து உண்ணுவதும் ஒருவருக் கொருவர் ஊட்டுவதும் பொற்கிண்ணத்தில் இருந்த தைக் குடிப்பதும் பிறகு வேடிக்கையாகப் பேசுவது மாக இருந்தனர்.

அங்கிருந்த ஒவ்வொரு பெண்ணையும் வரிசைக் கிரமமாகப் பார்த்துக்கொண்டே வந்தான் பசியப்பன். அப்பெண்களின் விழிகளிலே மை தடவி யிருந்தது. அவை கருவண்டுபோலிருந்தது. உதடுகளிலே மெல்லிய சிவப்பு சிரித்துக் கொண்டிருந்தது. கூந்தலில் மலர்க் கொத்துக்கள் சூட்டப்பட்டிருந்தன. கன்னங்கள் சிவப்

பும் மஞ்சளும் கலந்த ஒரு புது நிறத்துடன் மின்னிக் கொண்டிருந்தன. கழுத்தில் கிடந்த வைர மாலைகள் டால் அடித்துக் கொண்டிருந்தன. காதில் மாட்டப்பட்டிருந்த கம்மல்கள் ஜொலிப்பைப் பரப்பிக் கொண்டிருந்தன. அவர்களின் பட்டுடைகள் பளபளத்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு சிங்காரியும் தன் எதிரேயிருந்த ஆடவனுடன் பேசும்போது அவள் வாயில் புன்னகை ஒன்று நெளிந்து விளையாடிக் கொண்டிருந்தது. ஒருவரை ஒருவர் ஒருவிதமாகப் பார்த்து சிரிப்பதும் விழிகளை வெட்டுவதுமாக இருந்தனர். அந்தக் காட்சியைக் கண்ட பசியப்பனின் மனதிலே விவரிக்க முடியாத பற்பல எண்ணங்கள் உருவெடுத்தன.

விருந்து மண்டபத்துக்குப் பலர் வந்து கொண்டிருந்தனர் ஜோடி ஜோடியாக. ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு ஒருவர் தோளில் ஒருவர் கையைப் போட்டுக்கொண்டு - ஒருவர் இடையைச் சுற்றி மற்றவரின் கைபிடித்திருக்க - கலகலச் சிரிப்புடனும் - கிண்கிணிச் சிரிப்புடனும் - பற்பல தோற்றங்களில் வந்து கொண்டிருந்தனர். கைலாகுடன் குதூகலத்தை மனதில் அள்ளிப் புதைத்துக்கொண்டு செல்லும் அந்த நாரீமணிகளின் கழுத்தில் ஆடிய முத்துமாலைகள் எத்தனையோ குடிசையூர்களின் உயிர்கள் அழிய,—சமுத்திரத்தினடியில் ஊசலாட வைத்ததைப் பசியப்பன் அறியமாட்டான். அந்த முத்துச் சரங்களின் மோகன சிரிப்பைமட்டும் சிந்தை வியக்கப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை, அவர்கள் உடுத்தியிருந்த உடைகளைக் கண்டு, வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். எதையோ நினைத்தவன்

போல் தன் ஆடைகளின் மீது விழிகளைத் தாவவிட்டான். அழுகை வந்துவிடும் போலிருந்தது. அதை அடக்கிக்கொண்டு கவனத்தைக் காட்சிகளில் லயிக்க விட்டான்.

சிறிது நேரம் சென்றதும் திடுக்கிட்டான் பசியப்பன். ஒரு துடியிடையாள், ஒரு ஆடவனின் தோளின்மேல் கையைப் போட்டுக்கொண்டு சிரித்துப் பேசியவாறு சென்றாள். அவள் எப்படித்தான் அலங்காரம் செய்து கொண்டிருந்தாலும், அவளை அடையாளங் கண்டுவிட்டான், பசியப்பன்.

'இவள் நமது குடிசையூர் வேதனைக் கொடியல்லவா—இங்கு எப்படி வந்தாள்? அந்த ஆள் யார்? ஆளைக்கொல்லும் அழகையல்லவா இப்போது வைத்திருக்கிறாள்! ஏற்கனவே அவள் அழகிதான், இருந்தாலும் இப்போதிருப்பதுபோல—'

கேள்விகளும், ஆச்சர்யமும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன பசியப்பனுக்கு. அவளைக் கூப்பிடலாமா என்று ஒரு கணம் யோசித்தான். அவன் யோசித்து முடிவதற்குள், அவள் அந்த ஆடவனுடன் உள்ளே போய், அங்கே போடப்பட்டிருந்த சந்தன நாற்காலியில் உட்கார்ந்தாள். பசியப்பனின் விழிகள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தன.

அவள், தன்னுடன் வந்தவனைக் கேலியும் கிண்டலும் செய்துகொண் டிருந்தவள். யதேச்சையாக விழிகளை விருந்து மண்டபத்தின் நுழைவாசலண்டை திருப்பினாள்; திகைத்துவிட்டாள்!

"அங்கே நிற்பது யார்? பசியப்பனைப் போலத் தெரிகிறதே.... சந்தேகமேயில்லை, பசியப்பன் தான்....!"

பசியப்பனேதான் என்று தெளிவாகத் தெரிந்ததும் அவள் எண்ணம் குடிசையூருக்குத் தாவி ஓடிற்று.

தன்னை மறந்திருந்த அவளைக் கண்டதும் அந்த ஆடவனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"என்ன யோசிக்கிறாய்?"

இந்தக் கேள்வி வந்ததும்தான் அவள் தன் நினைவுக்கு வந்தாள்.

"ஒன்றுமில்லை பழைய நினைவு!"

சிரித்துக்கொண்டே சொன்னாள். ஆனால் அவள் மனம் மட்டும் படபடவென்று அடித்துக்கொண்டது. தட்டிலிருந்த பழங்களை ஒவ்வொன்றாக எடுத்துத் தானும் தின்றுகொண்டு அவளுக்கும் கொடுத்துக் கொண்டிருந்தான் அவன். அப்பெண்ணின் வாய், அப்பழங்களை மென்றுகொண் டிருந்ததே தவிர அவளுடைய எண்ணம் பூராவுமே பசியப்பனிடமே யிருந்தது.

"எப்படி வந்தான்! குபேரபுரி வாசலில் நிற்கும் காவல்காரன் இவனை விட்டிருக்கமாட்டானே! திருட்டுத்தனமாகத்தான் வந்திருப்பான்.......ஐயோ யாராவது கண்டால் என்ன செய்கிறது....பிய்த்து எறிந்து விடுவார்களே....!"

என்ற சிந்தனையில் சிக்கியிருந்தவள் தன்னுடன் வந்தவனை நோக்கி எனக்கு அவசரமான வேலை ஒன்றி

ருக்கிறது நாளை சந்தித்துக் கொள்வோமா என்றாள். அதற்கு சரி என்று சொல்லி, அவள் கன்னத்தை தட்டினான், அவள் சிரித்தாள்.

இதைக் கவனித்த பசியப்பனுக்கு உடலெல்லாம் எரிச்சலெடுத்தது. அந்த எரிச்சலிடையே தன்னையே நோக்கிவந்த தளிர்க் கொடியாளைக் கண்ட பசியப்ப னுக்குப் பலத்த யோசனையாகி விட்டது. இவள் நம்மை நாடித்தானே வருகிறாள் ஒரு வேளை நம்மை இன்னாரென்று தெரிந்து கொண்டாளோ....!

இதற்கிடையே அவளும் வந்துவிட்டாள் !

"பசியப்பா....!" என்று மெதுவாகக் கூப்பிட் டாள். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவ ளையே பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

"இப்படி யெல்லாம் என்னை இங்கு பார்க்கக் கூடாது. என்னுடன் வா, இங்கு நிற்காதே....! ஹூம் சீக்கிரம் புறப்படு!" என்றாள்.

"ஏன் வேதனைக் கொடி....?

"அதைப்பற்றி யெல்லாம் அப்புறம் பேசிக் கொள்ளலாம், நீ புறப்படு!"

பசியப்பன் ஒன்றும் பேசாமல் அவள் பின் னாலேயே சென்றான். இருவரும் பணத்தோட்டத்தை விட்டு வெளியே வந்தார்கள். இரவு நேரமாயிருந் தாலும், எலக்ட்ரிக் லைட்டின் ஜெகஜ்ஜோதியான வெளிச்சம் பற்பல வர்ணத்துடன் குபேரபுரி மாளிகை களில் எங்கும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த

ஜொலிப்பான காட்சியையும் பார்க்கத் தவறவில்லை பசியப்பன்.

ஒரு அழகான மாடி வீட்டின் முன்னே வந்து நின்றாள் வேதனைக் கொடி. பசியப்பன் பின்னாலே நின்றான்.

"பசியப்பா....இதுதான் எனது வீடு!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனாள். பசியப்பனும் பின் தொடர்ந்தான்.

சித்திர விளக்குத் தொங்கிக் கொண்டிருந்தது கூடத்திலே, தரையிலே ரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன அதன் மேல் நடக்கப் பசியப்பனுக்குக் கூச்சமாக இருந்தது. இதற்கு முன் கம்பளத்தின் மேல் நடந்திருந்தால்தானே!

"பயப்படாதே, தைரியமாக வா!" என்றாள் வேதனைக் கொடி. பசியப்பனும் நெஞ்சிலிருந்த பயத்தைச் சிறிது தளர்த்தி விட்டு அவள் பின்னே சென்றான்.

வேதனைக் கொடி கூடத்தை விட்டு உள்ளே போனாள், அங்கே ஒரு அறை. அதனுள் சென்று அங்கிருந்த சந்தன நாற்காலியைக் காட்டி, 'உட்கார்!' என்றாள். பசியப்பன், நாற்காலியில் உட்காரத்தயங்கினான். அதைக் கண்ட வேதனைக்கொடி.

"ஏன் தயக்கம், உட்காரேன்!" என்றாள். பசியப்பன் அதில் அமர்ந்தான்.

"வேதனைக்கொடி நீ இங்குதானே இருக்கிறாய்?"

"பசியப்பா என்னை வேதனைக் கொடி என்று கூப்பிடாதே!"

"ஏன்?"

"அந்தப் பெயரெல்லாம் குடிசையூரோடு போய் விட்டது!"

"அப்போ நீ வேதனைக்கொடி யில்லையா?"

"வேல்விழியாள்; விளையாட்டுக்காரி என்றுதான் இங்கு எனக்குப் பெயர்! வேதனைக்கொடி என்ற பெயர் குபேரபுரி வாசிகளுக்குப் புரியாது, புரிந்தாலும் பிடிக்காது!"

"ஆமா, நீ குடிசையூரை விட்டு ஏன் வந்தாய்?

"அது பெரிய கதை சரி நீ சாப்பிட்டாயா?

"ஊஹூம் இன்னும் சாப்பிடல்லே!"

"இன்னும் சிறிது நேரத்துக்குள் சாப்பாடாகி விடும் இங்கெல்லாம் மணி ஒன்பதுக்குத்தான் சாப்பிடு வார்கள். சரி ஔவல் குடி இப்போது!"

"ஔவலா....! அது என்ன புதுசாயிருக்கு?"

"ஓ நான் மறந்து விட்டேன்! அதெல்லாம் குபேரபுரிக் குடிவகைகள். உனக்கு எங்கே தெரியப் போகிறது. இதோ கொண்டுவருகிறேன் என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனவள் ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்தாள்.

"இதோ குடித்துப் பார்!"

பசியப்பன் வாங்கி ஒரு முணங்குக் குடித்தான். அவன் நாக்கு என்றுமில்லாத ஒரு சுவையைக் கண்

டது. ஒரே மூச்சாகக் குடித்துவிட்டான். இந்தச் சமயத்தில் அவன் மடியிலிருந்த பழத்தோல்கள் கீழே விழுந்தன. அதைக்கண்ட வேதனைக்கொடி—இல்லை வேல் விழி.

"பசியப்பா, இவைகளை ஏன் பொறுக்கினுய்?" என்ருள். அப்போது தான் பழத்தோல்கள் கீழே விழுந்துகிடப்பதைக் கண்டான் அவன்.

"நமது குடிசையூர் ஜனங்களுக்குக் காட்ட!"

விழிகளில் வெட்கமும் பரிதாபமும் படரப் பசியப்பன் சொன்ன இவ்வார்த்தைகளைக் கேட்ட வேல்விழி, கலகலவெனச் சிரித்தாள். திடீரென அச்சிரிப்பு நின்று, நீர் இரண்டு சொட்டு அவள் கன்னத்தில் உருண்டன. இதைப் பசியப்பன் கவனிக்கவில்லை.

"ஏன் சிரிக்கிருய்?"

"இல்லை, வெறுந் தோல்களைப் பொறுக்கி வைத்திருந்தாயே....!" என்று சொல்லிக் கொண்டே, தரையில் கிடந்த பழத்தோல்களைக் காலால் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளினுள். இதைப் பார்த்தப் பசியப்பனுக்குக் கோபம் சிறிது ஏற்பட்டது. ஆனுலும் அதை வெளியே காட்டவில்லை. எனினும் அவன் மன நிலையை அறிந்து கொண்டாள் வேல்விழி.

"பசியப்பா, இவைகள் உனக்கு வேண்டாம். நான் பழங்களே தருகிறேன்.

"ஆமா, நீ இங்கே வந்த கதையைச் சொல்லவில்லையே!"

"குடிசையூரிலே நானும் அம்மாவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது தான் தெரியுமே உனக்கு?"

“ஆமா, நான்தான் வெளியூருக்குப் போய்விட்டேனே!”

“கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தோமா, அந்த நேரத்திலே என் மனம் எண்ணாதது எல்லாம் எண்ணும். பலசமயம் பட்டினித் தோட்டத்திலே படுப்பேன். அவ்வேளை இப்பணத்தோட்டத்தைப் பற்றியும், குபேரபுரியைப் பற்றியும் ஊரார் பேசியது நினைவுக்கு வரும்....!”

“உம்....சொல்லு அப்புறம்!”

“ஒருநாள் இக்குபேரபுரி பக்கமா வந்தேன். உள்ளே விடமாட்டேன் என்றான் காவல்காரன். அவனை ஒருவிதமாக ஏமாற்றிவிட்டு உள்ளே வந்தேன் குபேரபுரியைச் சுற்றி பார்த்து விட்டுப் பணத்தோட்டத்துக்குள் வந்தேன். அங்கே உள்ள காட்சிகளைக் கண்டதும் பிரமித்து விட்டேன்.

பணத்தோட்டக் காட்சிகளில் நெஞ்சையும், நினைவையும், பறிகொடுத்திருந்த என்னை, பசி தன் நிலைக்கு கொண்டு வந்தது. பசியின் தாக்குதலைத் தாங்காது ஓலமிட்டு அழத்துவங்கினேன்.

விருந்து மண்டபத்தின் வாசலில் வந்து நின்றேன். அது விருந்து மண்டபம் என்று எனக்குத் தெரியாது. ஜனங்கள் சாரைசாரையாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் ‘பசிக்குது’ என்று சொல்லி ஏதும் கேட்டாலென்ன என்று தோன்றியது.

ஒருவர் தனியாக வந்தார், பார்வைக்கு பெரிய மனுஷர் போல் இருந்தார். அவர் என் அருகே வந்ததும்,

"ஐயா....!" என்றேன்.

அவர் திடுக்கிட்டுத் திரும்பி என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "இதென்ன புதிதாக இருக்கிறதே! நீ எந்த ஊர்!" என்று கேட்டார்.

"குடிசையூர்!"

"ஓ குடிசையூரா, அதுதானே பார்த்தேன். உனக்கு என்ன வேண்டும்?"

"பசிக்குது...!"

"பசிக்குதா? அதென்ன புரியவில்லையே! நீ வைத்திருக்கிறாயா எங்கே கொடு பார்ப்போம்?"

அப்பெரிய மனுஷர் இப்படிக் கேட்டதும் எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. கேலி செய்கிறாரே என்ற ஆத்திரமுங்கூட

"ஏதும் சாப்பிட..." என்று இழுத்தேன்.

"ஓ சாப்பிட வேண்டுமா! அதெல்லாம் இங்கு கிடைக்காது. இந்த இடத்தைவிட்டு ஓடு. உன்னைப் போல ஆட்களெல்லாம் இங்கு வரக்கூடாது நீ எப்படி இங்கு வந்தாய்?"

என்று என்னவெல்லாமோ கேட்டார். சொன்னார். எனக்குப் பயமாகப் போய்விட்டது. மெதுவாக அந்த இடத்தைவிட்டு நகர்ந்தேன். சிறிது தூரம் போயிருப்பேன். ஒரு வாலிபன் என்னெதிரே வந்தான். என்னைக் கண்டதும் ஆச்சரியத்தால் விழிகள் விரியப் பார்த்தான். என் பசி 'இவனிடம் கேள்!' என்று வற்புறுத்தியது. அவரைப் பார்த்துச் "சாப்பிட வேண்டும்" என்றேன்.

“சாப்பாடா....?” என்று கேட்டு விட்டுச் சிறிது நேரம் எதையோ எண்ணினான். பிறகு, “என்னுடன் வா” என்றான். நான் சென்றேன். ஒரு ஜவுளிக் கடைக்குள் சென்று சில பட்டுத் துணிகளை வாங்கினான். என்னையும் அழைத்துக் கொண்டு இந்த வீட்டுக்கு வந்தான்.

இந்த வீட்டின் அலங்காரத்தையும், அழகையும் கண்டதும் அப்படியே பிரமித்து விட்டேன். பீதி வேறு படர ஆரம்பித்து விட்டது. நெஞ்சை அமுக்கிப் பிடித்துக்கொண்டு மிரள மிரள இம்மாளிகையைப் பார்த்தேன். அவன் சிரித்துக் கொண்டே என் கைகளைப் பிடித்து இவ்வறைக்குள் கொண்டு வந்தான்.

என் கரங்களைக் கூச்சமில்லாமல் அவர் தீண்டியதும், என் உடலெங்கும் புல்லரித்தது. வெடுக்கென்று என் கைகளை விடுவித்துக் கொண்டேன். அவர் ‘என் பயப்படுகிறாய்’ என்று கூறிக் கொண்டே முன் சென்றார்.

இவ்வறைக்குள் வந்ததும் ஒரு பொத்தானை அமுக்கினார். சிறிது நேரத்துக்கெல்லாம் நாற்பது வயது மிக்க ஒரு பெண் வந்தாள். அவளிடம் ஏதோ சொன்னார். அவள் சென்றதும் என்னிடம் “சாப்பாடு வரும் முதல் அதை முடித்து விட்டு, இவ்வாடைகளை அணிந்து கொண்டு இரு. சிறிது நேரத்துக்குள் நான் வருகிறேன்” என்று கூறிச் சென்று விட்டான். எனக்கு இந்த உபசரிப்புகளைக் கண்டதும் ஆச்சரியத்தினால் அசந்து விட்டேன். குபேரபுரி வாசிகள் எல்லோரும் இப்படித்தான் போலிருக்கிறது என்று எண்ணிப் பேசாமல் இருந்து விட்டேன்.

உணவு வந்தது. சாப்பிட்டுவிட்டு, ஆடைகளால் என்னை அலங்கரித்துக் கொண்டேன்.

சிறிது நேரத்துக்குள் அவன் வந்தான். என்னை நன்ருகப் பார்த்தான். இப்போது நீ எவ்வளவு அழகாக இருக்கிருய்" என்ருன். இதைச் சொல்லும் போது, அவன் வாயில் புன்னகை இருந்தது. உடனே அங்கிருந்த நிலைக்கண்ணுடியைப் பாாத்தேன். நானே பிரமித்துவிட்டேன். அவ்வளவு அழகாக இருந்தேன் அப்போதுதான் குடிசையூர் நினைவு வந்தது.

"நேரமாய் விட்டது. நான் ஊருக்குப் போக வேண்டும், நீங்கள் செய்த உதவிக்கு....!"

நான் சொல்லி முடிக்கவில்லை. அவன் குறுக்கிட்டான்.

"இரவு நேரம். நீ எப்படிப் போவாய் ?"

இந்தக் கேள்வி அவனிடமிருந்து வந்த பிறகு தான், நேரம் சென்று விட்டது, இரவு நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தேன். நான் இருந்த நிலை, பொழுதைக்கூடக் கவனிக்க வைக்கவில்லை. எப்படி ஊர் போவது ? என்ற கேள்வி என்னை மீண்டும் வந்து தாக்கிற்று. என் உடலெல்லாம் வியர்த்து விட்டது.

அவன் பேச்சை மீண்டும் துவக்கிஞன்.

"உன் பெயர் என்ன ?"

"வேதனைக்கொடி !"

வேதனைக்கொடி! சே! நன்ருக இல்லை. வேல்விழி என்று மாற்றி வைத்துக் கொள்! இதோ பார்

வேல்விழி, ஊர் போவது இருக்கட்டும். நீ முன்னை விட அழகாயிருக்கிறாயல்லவா ?'' என்று கேட்டு விட்டு என் கன்னத்தில் லேசாகத் தட்டினான்.

நான் திகைத்து விட்டேன். மிரள மிரளப் பார்த்தேன். அவன் சிரித்துக் கொண்டே என்னை அணைத்தான். திமிறினேன் அவனிடமிருந்து விலக முடியவில்லை.

" ஏன் ஆத்திரப்படுகிறாய் ? இந்தா, உன் ஊரு பேரு எல்லாவற்றையும் மறந்து விடு. உன் ஊரைப் பற்றித் தான் உனக்குத் தெரியுமே! குடிசையூரும் பட்டினித் தோட்டமும்....! வேல்விழி, என்னுடன் இரு! இந்தக் குபேரபுரியிலே அழகான பங்களா, பணத்தோட்டம்....!" என்று என்னவெல்லாமோ கூறினான்.

சரிதான். குடிசையூரில், பட்டினித் தோட்டமே கதியென்று கிடப்பதைவிட, இங்கேயே இவனுடன் இருந்தால் என்ன? இவனைக் கலியாணம் முடித்துக் கொண்டு சந்தோஷமாக வாழலாமே, என்று எண்ணினேன். இந்த எண்ணம் சரி என்று பட்டதும், பொதுவாகப் புன்னகை பூத்தேன்.

''பூரிக்கச் செய்கிறது உன் புன்னகை! புதுப் பொன் போல் மின்னும் உன் மேனியைத் தழுவ....!'' என்று கூறிக்கொண்டே, என்னைத் தழுவினான்.

நான் அவன் கரங்களை விலக்கிக் கொண்டே, '' கழுத்தில் தாலி ஏறட்டும். அதன் பிறகு நாம்....!'' என்று இழுத்தேன்.

"இங்கே தாலி கட்டுவது கிடையாது"

"என்ன, தாலி கட்டுவது இல்லையா? அப்படியானல் கலியாணம் எப்படி நடக்கிறது?"

"அதுதான் நடக்கப்போகிறதே?" என்று சொல்லி என்னைத் தழுவினன். முத்தமிட்டான் வேறு என்னவெல்லாமோ செய்தான்.

என் மனம் கல்யாணம், கல்யாணம் என்று அடித்துக்கொண்டது. அதே சமயம் என் உடலெங்கும் ஒரு இன்ப வெறி ஓடிக்கொண்டிருந்தது.

"கல்யாணமாகு முன்பே....!"

"வேல்விழி, இங்கு இப்படித்தான் கலியாணம் நடக்கும்!"

அவன் சொன்னது ஒரு வேளை உண்மையாக இருக்குமோ என்று நினைத்தேன். இதற்குள் அவன் என்னை...

பசியப்பா, சுருக்கமாகச் சொல்லுகிறேனே, வெகு நேரம் சென்ற பிறகுதான் நான் தூங்கினேன். விடிந்து எழுந்ததும் அவனைப் பார்த்தேன். காணவில்லை! அறையை விட்டு வெளியே வந்தேன். ஒருவயதான அம்மா வந்தாள். அவளிடம் விசாரித்தேன். சிரித்தாள் அவள். பிறகுதான் விஷயத்தைச் சொன்னள். குபேரபுரிவாசிகள் அப்படித்தானும். இரவுக்கொரு பெண்ணுடன் விளையாடுவார்களாம்; விடிந்ததும் போய்விடுவார்களாம். இப்படி நடப்பது குபேரபுரியில் சகஜம். சட்டம் இடங்கொடுக்கிறது என்ருள் எனக்குப் பகீரென்றது. அப்புறம் சொல்லவாவேண்டும். முதல்நாள் நிகழ்ச்சி தொடர ஆரம்பித்தது.

நானும் இந்த வீட்டை வாங்கினேன். பணத்தோட்டத்தில் பரவசமாகத் திரிகிறேன்...!" என்றாள்.

"அடிப்பாவி! விபசாரமா ஆடுகிறாய்....?" வெறுப்புடன் கூவினான் பசியப்பன்!

"இந்தா ஏன் கூச்சல் போடுகிறாய்? பட்டினித் தோட்டத்திலே, கும்பி கொதிக்கப் படுத்துக் கிடப்பதைவிட இங்கு ஏன் இப்படி இருக்கக் கூடாது? நம்ம ஊரில்தான் விபசாரம் என்பார்கள். இங்கே 'என் ஜாய்மெண்ட்' என்பார்கள்!"

"என்ஜாய்மெண்டா? அப்படின்னா?"

உனக்கு அதெல்லாம் புரியாது! நம்ப குடிசையூரிலே, மோசம், குடி, சூது, பித்தலாட்டம், துரோகம், வஞ்சனை—அப்படி இப்படி என்று அடுக்குவோமே, அதெல்லாம் இங்கு சகஜம்! அடிக்கடி குடிசையூர்ச் சனங்களைச் சில குபேரபுரிவாசிகள் கூட்டிக்கொண்டு வருவார்கள். அது சமயம் இதெல்லாம் நடக்கும் ஆனால் இதற்கெல்லாம் அர்த்தமும் பெயரும் வேறு."

சொல்லிவிட்டுச் சிரித்தாள். அச்சிரிப்பிலே தான் எத்தனை பொருள்! பசியப்பனுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை!

"பசியப்பா நமது குடிசையூர் இருக்கிறதல்லவா?"

பசியப்பன் 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

"அங்கே யிருப்பவர்களெல்லாம் பைத்தியக்காரர்கள் என்பது என் எண்ணம்."

"பைத்தியக்காரர்களா...!"

ஆமாம் பத்தினியாக இருக்கவேண்டுமென்று எண்ணுகிறார்கள். பட்டினித் தோட்டத்திலே படுத்துறங்குகிறார்கள் வாழமாட்டேன் என்கிறார்கள்—சாகிறார்கள் !

வேல்விழி பேசுவது பசியப்பனுக்கு பொறுக்க முடியவில்லை என்ன செய்வது ?

" ஆமா பத்தினிகளாக இருப்பது பைத்தியக்காரத்தனமென்றால், நீ இப்போதிருக்கிற...!

" இந்தா பசியப்பா இக்குபேரபுரியைப் பற்றியும் இங்குள்ள பணத்தோட்டத்தைப் பற்றியும் உலகெங்கும் பேச்சாக இருக்கிறதே, இங்கே இதெல்லாம் எவ்வளவு அருமை பெருமையுடன் நடக்கின்றன ! குபேரபுரிப் பெண்களுக்கு, எத்தனையோ காதலர்கள் இருக்கிறார்கள். குடிசையூரிலே...நீ ஏதோ....!"

" குடிசையூரிலே காதலர்களா....?"

ஆமாம் தாலிகட்டியவர் சுகப்படவில்லை என்று 'டைப்பர்'கூட வைத்திருக்கிறார்கள். எத்தனையோ பெண்கள் ஆண்கள்கூட அப்படி யிருக்கிறார்கள் இங்கே !

" என்ன வேதனைக்கொடி 'டைப்பர்' என்று சொல்றே! நீ சொல்வது, சிரிப்பது, அர்த்தம் கூறுவது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை ! எல்லாம் புதுசா யிருக்கு ! நீ கூடப் புதுசா மாறிட்டே !"–என்றான் பசியப்பன். அவன் பேசியது பரிதாபமாக இருந்தது.

"பசியப்பா, முதல்லே வேதனைக்கொடி என்று கூப்பிடக் கூடாது. அந்தப் பெயரை மறந்துவிடு. வேல்விழி யென்று அழை. நீ புரியாதவனா யிருக்கிறாய்

உனக்குக் குபேரபுரி விஷயம் ஒன்றுமே தெரியாது. வேண்டுமானால் இரண்டு நாள் தங்கி இங்கு நடப்பதை யெல்லாம் பார். ஆனால், இந்தக் கோலத்துடன் இங்கே இருக்கக்கூடாது. நான் புதிய உடைகளை வாங்கித் தருகிறேன்...!'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள், வேல்விழி.

ஆமாம், இரண்டு நாளென்ன, இரண்டு வாரமாவது இருந்து இக்குபேரபுரியைப் பற்றிச் சரிவர அறியணும்-என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான் பசியப்பன்.

* * *

அடுத்தநாள் வேல்விழி பசியப்பனைக் கடைத்தெருவுக்கு அழைத்துக் கொண்டுபோய் அவனுக்கு வேண்டிய உடைகளை வாங்கிக் கொடுத்தாள். அவைகளை அணிந்ததும், பசியப்பனை அடையாளங் கண்டு கொள்ள முடியவில்லை. மேலும், வேல்விழியும் தன் கைவரிசையைக் காட்டி 'மேக்கப்' செய்திருந்தாள். ஆகவே அசல் குபேரபுரிவாசியாக மாறிவிட்டான் பசியப்பன் !

பசியப்பனை அழைத்துக்கொண்டு ஒரு பெரிய மாளிகை முன் போய் நின்றாள் வேல்விழி. அந்த அழகு மாளிகையைப் பார்த்து ஆச்சர்யத்துடன் நின்றான் பசியப்பன். இம்மாதிரி மாளிகையை அவன் கனவில்கூடக் கண்டது கிடையாது. அவ்வளவு அற்புதமாக இருந்தது. அம்மாளிகையின் முகப்பில் 'கலைக்கோயில் மாளிகை' என்று பொன் எழுத்துக்களால் வரையப்பட்டிருந்தது. "பொன்னால் கூட எழுதி யிருக்கிறார்களே!'' என்று வியந்தான் பசியப்பன்.

"இந்தா ஏன் வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறாய்? யாரும் பார்த்தால் குடிசையூரானென்று நினைத்துவிடுவார்கள். வா சீக்கிரம். உள்ளே பார்க்க வேண்டியது அநேகம் இருக்கு!" என்று பசியப்பனின் காதில் சொன்னாள் வேல்விழி.

அவன் ஒரு பெரு மூச்சுடன் அவள் பின்னே சென்றான்.

அம்மாளிகையின் நடுவே உள்ள மண்டபத்துக்குள் சென்றார்கள். அங்கே சென்றதும், தான் காண்பது கனவா, நனவா என்ற சந்தேகம் உண்டாயிற்று பசியப்பனுக்கு. அப்படியே சிலையாகி விட்டான்.

யானைத் தந்தத்தால், சித்திர வேலைகளுடன் அமைந்த ஒரு பெரிய பஞ்சணைக் கட்டில் அங்கேயிருந்தது. அக்கட்டிலின் மேல் விளிம்பிலே இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தன அதைச்சுற்றி நாற்புறங்களிலும் அகல வரிசையாக, பவளங்கள் பதிக்கப்பட்டிருந்தன. அக்கட்டிலின் தலைப்பக்கம், நாகப்பாம்பின் படம் போல ஒரு தட்டு வளைந்திருந்தது. அந்த வளைவின் முகப்பிலே, ஒரு மயில் தங்கத்தில், சிலையாகச் செதுக்கி வைக்கப்பட்டிருந்தது. வளைவிலே வைரங்கள் நட்சத்திரங்கள் போல புதைக்கப்பட்டிருந்தன. கட்டிலின் மேல் ஒரு மெல்லிய துணி சுருக்கி விடப்பட்டிருந்தது. அதன் கரைகளிலே முத்துக்கள் மாலை மாலையாகத் தொங்கவிடப்பட்டிருந்தன. அக்கட்டிலைச் சுற்றிச் சிறிது தூரத்தில், சிறு சிறு தொட்டில்கள் இருந்தன. அவைகளிலே மல்லிகை,

ரோஜா, சண்பகம், ராணிமல்லிகை, தாழம்பூ, மருக் கொழுந்து, இருவாட்சி, வெட்டிவேர்....இப்படியாக விதவிதமான மணமுள்ள பூக்கள் நிரப்பப்பட் டிருந் தன.

அக்கட்டிலிலே ஒரு பெண் படுத்திருந்தாள். ஒரு கையைத் தலைக்குக் ஆதரவு கொடுத்து, அவள் படுத் திருந்த காட்சி மனதைப் பிடித்திழுத்தது. சுருக்க மாகச் சொன்னால்; 'அழகுத் தோட்டமாக' இருந் தாள்.

அந்த வண்ணச் சித்திரம் படுத்திருந்த அக்கட்டி லுக்குச் சிறிது தூரத்தில், சிலர் இருந்து கொண்டு பற் பல வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். இந்தக் காட்சி விநோதமாக யிருந்தது, பசியப்பனுக்கு.

"வேல்விழி இந்தப் பெண் யார்?"

"இவள்தான் கலைத்தேவி!"

'இவள், ஏன் இதில் படுத்திருக்கிறாள்?"

"படுத்திருப்பதுதான் இவளுக்கு வேலை! குபேர புரி வாசிகள் இவளுக்கென்றே இந்த இடத்தை அமை த்து அதோ, பல வேலைகள் செய்கிறார்களே அவர்களை யும் இங்கு வைத்திருக்கிறார்கள்!"

'ஏன்?'

"ஏனா? மனதுக்குப் பல வழிகளிலும் மகிழ்ச்சி யைத் தேடுவதற்கு! இதைப்பார்த்ததுபோதும், என் னுடன் வா!"

வேல்விழி அவனை அழைத்துக்கொண்டு அங்கே பல வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்களிடம் அழைத்து

சென்றாள். அவர்களில் ஒருவன் படம் வரைந்துகொண்டிருந்தான். வேல்விழி அவனைச் சுட்டிக்காட்டி.

"இவருக்குப் பெயர் ஓவியர். இந்தக் கலைத்தேவி குளிக்குமிடங்களை - உல்லாசமாக ஆடிப்பாடிபொழுது போக்குமிடங்களை படமாக வரைந்து கொண்டிருப்பார். இதோ இவர் வரைந்த படம்! என்று சொல்லிக்கொண்டே அங்கே மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தைக் காட்டினாள்.

ஜிலு ஜிலு என்ற நீரோடை அதை அடுத்து ஒரு நீர் வீழ்ச்சி! அந்த நீர் வீழ்ச்சிக்கு உயர மலைகள். அவைகளின் மேலே வெண்ணிற மேகங்கள் ஊர்ந்து சென்று கொண்டிருந்தன, நீர் வீழ்ச்சியின் காட்சி, வெள்ளியை உருக்கி ஊற்றுவது போலிருந்தது. அந்த நீர் வீழ்ச்சியின் நீரைத் தன்னுள் அணைத்தவாறு ஆடி அசைந்து கொண்டிருந்தது. அதிலே அல்லித் தாமரைகள் அங்குமிங்கும் சிதறுண்டு கிடந்தன. அன்னங்கள் நீந்திக் கொண்டிருந்தன.

இக்காட்சியைக் கொண்ட அந்த ஓவியத்தைப் பசியப்பனுக்குக் காட்டி 'இந்த நீரோடையில்தான் கலைத்தேவி குளிப்பாள்' என்றாள் வேல்விழி.

பசியப்பனுக்கு, அவள் சொன்னது புரியவில்லை. விளக்கமாகவும் கேட்கப் பயமாக இருந்தது. பேசாமல் அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான். வேல்விழி இன்னொருவனைச் சுட்டிக் காட்டி.

'இவர்தான் சிற்பி. அதோ படுத்திருக்கிறாளே கலைத்தேவி, அவளை அப்படியே கல்லில் உருவாக

அமைத்துவிட வேண்டும். இதோ அவர் செய்தது'! என்று சொல்லி ஒரு சிலையைக் காட்டினாள். உண்மையில், அது அங்கே படுத்திருக்கும் பெண்போலவே யிருந்தது.

அங்கேயிருந்த மற்றொருவரைக் காட்டினாள் வேல்விழி.

'பசியப்பா, இவர்தான் கவிஞர். கலைத்தேவி பாடும்போது இவர் அதை எழுதிக் கொள்வார்!'

"வேல்விழி அதோ அங்கிருக்கிறாரே அவர்...?"

"ஓ அவரா, எழுத்தாளர். வா அவரைப் போய்ப் பார்ப்போம்!" என்று பசியப்பனை அழைத்துக் கொண்டு அவரிடம் சென்றாள்.

அந்த மனிதருக்குப் பக்கத்தில் அநேக புத்தகங்கள் இருந்தன. வேல்விழி அவைகளைச் சுட்டிக்காட்டி "இவ்வளவும் இவர் எழுதியவைதான்!" என்றாள்.

பசியப்பன் அவைகளைப் பார்த்தான்.

முத்தத்தின் முறைகள். அணைப்பின் ஆனந்தம். கூடலின் சுகம்—இன்பம்பெற வழி.

சத்துணவுகள், வைட்டமின் போஷாக்குகள், உடல் வனப்பு, தேகாரோக்கியம்!

நடிகையின் உள்ளம், நாட்டியக்காரியின் சாகஸம், இசைவாணியின் காதல்.

கலையின் வளர்ச்சி, காவியத்தின் கவர்ச்சி, இலக்கியத்தின் மாண்பு. நாகரீகத்தின் வளமை.

இப்படி வரிசைக்கிரமமாக அடுக்கப்பட்டிருந்தன.

"வேல்விழி, இதெல்லாம் குபேரபுரிக்குத்தானே?"

"ஆமாம், குபேரபுரிக்கென்றே இவர்கள் எழுது கிறார்கள். இங்கேயிருக்கிற அத்தனையும் இவர் எழுதியதல்ல. இவரைப்போன்ற பலர் எழுதியவை. அவர்கள் எல்லாம் இரவில்தான் வருவார்கள்!"

'ஆமாம் நம்ப குடிசையூருக்கு ஒன்றும் இல்லையா?

'அதோ அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறதே, அவைகளைத்தான் குடிசையூருக்கு அனுப்புவார்கள்!'

வேல்விழி இப்படிச் சொல்லிவிட்டு, மறுபகுதியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களில் சிலதை எடுத்துக் கொண்டுவந்து பசியப்பனிடம் காட்டினாள். அவன் ஆவலுடன் வாங்கிப் பார்த்தான்.

கடவுளின் கருணை, விதியின் விளையாட்டு, பேராசை பெருந்தரித்திரம் கடவுளை அடையவழி, உலக மாயை, சன்மார்க்கம், பிறவித் துன்பம், முக்தி வாசல், பக்தித் தாண்டவம், நடராஜர் நாட்டிய சூட்சுமம் — என்றிருந்தன.

அவைகளை வைத்துவிட்டு, வேல் விழியைப் பார்த்தான். அவள் இன்னொரு பகுதியிலிருந்த, சில புத்தகங்களை எடுத்துக் கொடுத்தாள். அவையெல்லாம் புது புது பெயர்களாயிருந்தன.

"வேல்விழி, அந்தப் புத்தகங்களையெல்லாம் ஏன் குடிசையூருக்கு அனுப்புறாங்க?"

"தெரியவில்லை! ஆனால், இவர்களிலே, சிலர் எழுதுபவற்றையெல்லாம் குடிசையூருக்கு அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள்!"

'இப்போ, காட்டினாயே, இதையெல்லாம் அனுப்புறாங்களா ?

"ஊஹூம்....! இதெல்லாம் இலக்கியங்கள் என்று சொல்கிறார்கள். இவைகளை அனுப்புகிறார்களோ என்னவோ தெரியவில்லை! சரி வா, நாம் போவோம்!' என்று கூறிக்கொண்டே வெளியே வந்தாள். பசியப்பனின் உள்ளத்திலே கேள்விகள் உருவெடுத்து நின்றன. 'வேல்விழிக்குக்கூட தெரியலே....!' என்று எண்ணினான்.

மண்டபத்துக்கு வெளியே அழகான வீதிகள் வளைந்து, வளைந்து சென்று கொண்டிருந்தன. பசியப்பனை எங்கேயோ அழைத்துக்கொண்டு சென்றாள் வேல்விழி.

அது ஒரு தோப்பு! அதன் நடுவில் ஒரு சிறு மைதானம். அங்கே ஆண்களும் பெண்களும் எதையோ விளையாடிக் கொண்டிருந்தனர். பசியப்பன் ஆச்சர்யத்துடன் அதைப் பார்த்தான். வேல்விழி மெதுவாகச் சிரித்தாள்.

பசியப்பா இந்த விளையாட்டுக்குப் பெயர் 'டென்னிஸ்'

'டென்னிஸ்ஸா'....

ஆமா வா, இன்னுங்காட்டுகிறேன்.

வேல்விழி வேறொரு இடத்துக்கு பசியப்பனை அழைத்துச் சென்றாள். அங்கும் பலர் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இந்த விளையாட்டுக்குப் பெயர் 'கிரிக்கெட்' அங்கே விளையாடுகிறார்கள் பாரு அதற்குப் பெயர் 'பாட்மிண்டன்'. இந்தப் பக்கத்திலே ஆடுகிறார்களே அதை 'ஹாக்கி' என்பார்கள்" என்று அடுக்கிக்கொண்டு போனாள் வேல்விழி.

பசியப்பனுக்கு இதையெல்லாம் பார்க்கச் சந்தோஷமாக யிருந்தது. அத்துடன் வியப்பும், வேதனையும்கூட இருந்தன.

"வேல்விழி, இதெல்லாம் நம்ம குடிசையூரிலே இல்லையே....ஏன் ?"

"என்னமோ, குடிசையூருக்குத் தேவை யில்லை என்கிறார்கள், இக்குபேர புரியார்கள்....இதெல்லாம் பொழுது போக்காம். உடம்பு ஆரோக்கியத்துக்காம்.... என்று என்னவோ சொல்கிறார்கள்....!" என்று கூறி விட்டு, இன்னொரு வீதிக்கு வந்து ஒரு பெரிய கூட்டத்துக்குள் புகுந்தாள். அங்கே ஒரு அறையை நோக்கி, ஜனங்கள் வருவதும், போவதுமாக இருந்தனர். அவர்கள் கையில் பணநோட்டுகளும், இன்னும் பல நிறத்தில் துண்டுக் காகிதங்களுமிருந்தன. வேல்விழியும் அந்த அறைக்குள் போய் திரும்பி வந்தாள். அவள் கையிலும், அந்தக் காகிதத் துண்டு இருந்தது

"அது என்ன, வேல்விழி?"

"டிக்கட்! இன்றைக்கு ரேஸ்....!"

"ரேஸா...!"

"ஆமா, நிறையக் குதிரைகளெல்லாம் ஓடும்' பணம் கட்டி ஆடுவார்கள். வா, போய் பார்ப்போம்!" என்று கூறிக்கொண்டே உள்ளே போனுள்....பசியப்பனும் சென்ருன்.

அங்கே ஒரு மைதானம் அதைச்சுற்றி மேலிருந்து கீழாக ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவைகளில் குபேரபுரி வாசிகள்தான் நிறைந்திருந்தார்கள்! குதிரை ஓட்டம் நடக்க ஆரம்பித்தது.... ஒரே ஆரவாரம். குதிரைகள் மைதானத்தைச் சுற்றி ஓடி வந்தன. அவைகள் வந்த வேகம்?—இதைப் பார்க்கப் பசியப்பனுக்கு, ஒரு பக்கம் பயமும், மறுபக்கம் ஆனந்தமுமாக இருந்தது.

குதிரைகள் ஓடி முடிந்ததும், பசியப்பனே அழைத்துக்கொண்டு இன்னெரு இடத்துக்கு வந்தாள் வேல்விழி அங்கே, பண நோட்டுக்கள் கத்தை கத்தையாக பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தன. பசியப்பன் இதைக் கண்டதும் மலைத்து விட்டான்.

"நம்ப குடிசையூரிலே இந்த மாதிரி ஒரு நோட்டைக்கூடக் காண முடியாதே! இங்கே...."

"பசியப்பா, இது ரேஸ்....குபேர புரியார்களுக்கு இது ஒரு விளையாட்டு"

"பணத்தை இப்படி ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக்கிட்டு இருப்பது விளையாட்டா!"

"சூதாடுவது ஒரு விளையாட்டு பொழுது போக்குக்கு இதெல்லாம் வேண்டுமென்கிருர்கள்! சரி வா!"

பசியப்பனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. 'இக்குபேரபுரி வாசிகளே விசித்திரமானவங்க!' என்று எண்ணிக்கொண்டு நடந்தான்.

அன்று இம்மாதிரி காட்சிகளையெல்லாம் பார்த்து விட்டு வேல் விழியாளுடன் வீட்டுக்குத் திரும்பினான். வீட்டுக்குத் திரும்பியதும் வேல்விழி சொன்னாள். பசியப்பா, இன்னும் எவ்வளவோ இருக்கிறது, நாளைக்குப் போகவேண்டும்! என்று.

'சரி! என்றான் பசியப்பன்.

* * *

மறுநாள், பசியப்பனை அழைத்துக்கொண்டு போனாள் வேல்விழி. வீதியின் வழியே அழகான மாடிக்கட்டிடங்கள் வரிசை வரிசையாக யிருந்தன. பசியப்பனுக்கு அக்கட்டிடங்களைக் காட்டி, "பசியப்பா, இதற்குப் பெயர் என்ன தெரியுமா?" என்று கேட்டாள், அவன் விழித்தான். வேல்விழி சிரித்துக் கொண்டே 'கன்னிமாரா, வசந்த விகார், விக்டோரியா, பிருந்தாவனம், உட்லண்ட்ஸ், எவரெஸ்ட், தாஜ் மகால், மலபார்ஹில், பாலஸ் - ஆப் - ஈரானி, சங்கர் விலாஸ்...' என்று அடுக்கிக்கொண்டு போனாள்.

'என் வேல்விழி, இந்தப் பெரிய கட்டிடங்களிலெல்லாம் என்ன செய்யுறாங்க?' திடீரெனக் கேட்டான் பசியப்பன்.

வேல்விழி அவனைப் பார்த்து மெதுவாகச் சிரித்தாள்.

“ பசியப்பா, குடிசையூரார், இங்கு ஏன் வரப் போகிறார்கள்? அதனாலே ஒன்றும் தெரியாது... குபேர புரியார்கள் இரவிலே விளையாடுவதற்கு, இதை யெல்லாம் கட்டியிருக்கிறார்கள். நான் கூடச் சில சம யங்களில் இங்கே வந்திருக்கிறேன்.”

‘ என்ன, இரவிலே விளையாடுறாங்களா...?’

‘ ஆமா, பெண்களும் - ஆண்களும் சேர்ந்து விளை யாடுகிற விளையாட்டு !’

‘ பேரைப்பாரு ! ஆம்பிள்ளையும், பொம்பளையும் கட்டிப் பிடித்துக்கொண்டு புரளுவதற்குப்பேரு, விளை யாட்டாம், அதற்கு மாளிகையாம், குபேரபுரியே ஒரு தினுசு ’ என்று எண்ணியது பசியப்பனின் மனது.

இன்னொரு மாளிகைக்கு அழைத்துக்கொண்டு சென்றாள் பசியப்பனை. அம்மாளிகையின் உட்புறத் திலே மெத்தைகள் உள்ள நாற்காலிகள் இருந்தன. அதன் எதிரே நீண்ட மேசைகள் போடப்பட்டிருந் தன, அதன்மேல் கண்ணாடிப் பாத்திரங்களும், அவை களில் பல தினுசுப் பழங்களும் இருந்தன. குடிவகை கள் வேறு பரப்பப்பட்டிருந்தன. ஏராளமான ஆண் களும், பெண்களும் விருந்துண்டு கொண்டிருந்தனர். இன்பமும், ஆனந்தமும் ஆட்டம் போட்டுக்கொண் டிருந்தன அங்கே.

வேல்விழியும், பசியப்பனும் ஒரு ஓரத்தில் உள்ள நாற்காலியில் உட்கார்ந்தனர்.

‘ பசியப்பா, வேண்டிய மட்டும் சாப்பிடு !’

‘ இங்கே என்ன நடக்கிறது ?’

'விருந்து!'

'விருந்தா....! அடே யப்பா....! எப்படியிருக்கிறது! வேல்விழி நம்ப குடிசையூரிலேயும் விருந்து நடக்குமே!'

'தெரியும் மொச்சைக் கொட்டையும், தண்டங் கீரையும்!' ஆப்பிளைக் கடித்துக்கொண்டே சொன்னாள் வேல்விழி.

'இந்த விருந்து எதற்காக நடக்கிறது?'

'இங்கேயுள்ள 'கிளப்புகளின்' மாதாந்தர நாட்களில் கூடும் கூட்டங்களுக்காக!'

பசியப்பன் அதற்குமேல் ஒன்றும் கேட்கவில்லை. விருந்திலே கவனத்தை ஓட விட்டான்.

சாப்பாடு முடிந்ததும், எல்லோரும் அதன் அருகிலுள்ள ஹாலுக்குள் நுழைந்தனர். அங்கேயும் அழகான ஆசனங்கள் இருந்தன. வேல்விழி, பசியப்பனை அங்கு இழுத்துச்சென்று, ஒரு நாற்காலியில் உட்கார வைத்துத் தானும் அமர்ந்தாள்.

ஹாலுக்குள் ஒரு மேடை, பல நிறங்கள்கொண்ட 'எலக்ட்ரிக் பல்பு'களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஜொலிப்புடன் மிளிர்ந்தது அம்மேடை.

சில நிமிடங்கள் சென்றதும், 'சீன்கள்' தூக்கப் பட்டன. மேடை கண்ணைப் பறித்தது. கட்டழகிகள் அங்கு தோன்றினர். அவர்களைப் பார்த்தால், அப்பப்பா...! கண்ணையும் கருத்தையும் சேர்த்திழுக்கும் அலங்காரத்துடன் வந்து நின்றனர். பிறகு ஆடினர், பற்பல நாட்டியங்கள் பற்பல அலங்காரங்களுடன்!

பசியப்பன் கேட்டான். 'வேல்விழி ஆடுறுங்களே இவங்க யாரு?'

"இவர்களா, குபேரபுரி வீட்டுக் குமரிகள். இவர்கள் இல்லாம் தங்கள் ஓய்வு நேரத்திலே நாட்டியம் கற்றுப் பிறகு, இப்போது நடக்கிறதே டின்னர் பார்ட்டி, இந்த மாதிரிச் சமயங்களிலே வந்து ஆடுவார்கள். இங்கு வந்துள்ள சில 'பிரமுகர்கள்' அவர்களைப் புகழ்ந்து பேசுவார்கள்."

'ஆமா, இந்தப் பெண்களெல்லாம், ஓய்வு நேரத்திலே நாட்டியங் கத்துக்கிருங்கன்னு, ஓய்வில்லாத நேரம் வேறு இருக்குதோ ?"

"இருக்காமே? நேற்றுக் காட்டினேனே டென்னிஸ், கிரிக்கிட்....என்று இப்போது கூடக் காட்டினேனே கிளப், டான்ஸ் ஹால்....என்று. இங்கெல்லாம். நாள் முழுதும் திரிவார்கள். வீட்டிலிருக்கும் போது நேற்றுக் காட்டினேனே, இலக்கியங்கள் என்று, அதிலே மூழ்கி விடுவார்கள்....இவைகளெல்லாம் போக, மீதியாக உள்ள ஓய்வு நேரத்திலேதான் நாட்டியம். சங்கீதம் என்று கற்றுக் கொள்வார்கள். பசியப்பா, இந்தப் பெண்கள் மட்டும் தான் இப்படியெல்லாம் திரிகிருர்கள் என்று எண்ணுதே ஆண்களும்தான் !

"ஆம்பிள்ளைங்ககூட ஆடுவாங்களா ! ஏன் இப்படி எல்லாம் இவங்க ஆடணும் ? நாட்டியத்துக்கிண்ணு வேறு ஆட்களை வைச்சிருக்கலாமே ?"

"அப்படி வைத்திருக்கிருர்கள். நாட்டியத்துக்கென்று மட்டுமல்ல, சங்கீதத்துக்கு, நாடகத்துக்கு, சினிமாவுக்கு என்று தனித்தனியாக இருக்கிருர்கள். நேற்று போனோமல்லவா 'கலைக்கோயில் மாளிகை' என்ற இடத்துக்கு, அங்கே இருக்கிருர்கள். அதுவும்

போதாதென்று இவர்களும் இப்படி ஆடுவார்கள். பாடுவார்கள், ஏனென்ருல் லவ்வுக்காக—என்றுசொல்கிருர்கள் !

அந்த நாட்டியத்தைப் பார்த்து விட்டு வெளியே வந்தார்கள். அதை அடுத்து நாடக மண்டபத்துக்குச் சென்ருர்கள். சிறிது நேரம் சென்றதும் நாடகம் துவங்கிற்று. குபேரபுரிக்குத் தகுந்த கதைதான் அது பசியப்பனின் மனதும் அதைப் பார்த்துச் சந்தோஷப் பட்டது.

நாடகம் முடிந்து வெளியே வந்ததும் பசியப்பன் கேட்டான்.

“ வேல்விழி, இம்மாதிரி நாடகமெல்லாம் ஏன் குடிசையூரிலேகிடையாது? ”

“ ஏன். தெருக்கூத்து இருக்கிறதே, ஓயிலாட்டம் இருக்கிறதே! ”

“ இருக்கு. இருக்கு! ஆனா இந்த மாதிரி இல்லையே அதுதான் கேட்டேன் !”

உண்மைதான் இங்குள்ளவர்களைக் கேட்டால் இதெல்லாம் குடிசையூருக்கு அனுப்பக்கூடாது. அவர்களுக்குத் தெருக்கூத்து, ஓயிலாட்டம் என்று வைத்துக் கொடுக்கிறோம், என்கிருர்கள்!

“ வேல்விழி நான் ஒன்று கேட்கிறேன் கோபிக்க மாட்டாயே ?

‘கேளு சொல்கிறேன் !’

“ கடலை விக்கிறவங்க, காய்கறி விக்கிறவங்க, வண்டி தள்ளுறவங்க, மூட்டை தூக்குறவங்க—எல்லாம் நம்ப குடிசையூரிலே இருக்காங்களே, இங்கு ஏன் அவங்க இல்லை ?”

" ஊஹூம், ஒருவர் கூடக் கிடையாது!"

பல நாட்களாக, இம்மாதிரிக் காட்சிகளையெல்லாம் பசியப்பனுக்குக் காட்டினாள் வேல்விழி. எல்லாவற்றையும் பார்த்துச் சந்தோஷப்பட்டான் பசியப்பன்.

அன்று, தான் பார்த்த காட்சிகளையெல்லாம் நினைத்தவாறு படுத்திருந்தான். அவனுக்கு எல்லாம் கேள்விக் குறிகளாகவே யிருந்தன. பதில் ஒன்றும் கிடைக்கவில்லை!

விடிந்து எழுந்ததும், வேல்விழியிடம் கேட்ட கேள்வி இதுதான். "குபேரபுரி வாசிகள் இப்படிப் பொழுதைப் போக்குகிறார்களே, இவங்க ஒரு வேலையும் செய்யமாட்டாங்களா?"

இதைக் கேட்டு வேல்விழி சிரித்தாள்.

" இப்படி உல்லாசமாகப் பொழுது போக்குவது தான் இவர்களுக்குத் தினசரி வேலை. நமது குடிசையூர் ஜனங்கள் கஷ்டப்பட்டு வேலை செய்கிறதுபோல் இவர்கள் செய்யமாட்டார்கள். அப்படி வேலை செய்கிறவர்கள் யாருமே இங்கு கிடையாது!"

" அப்படி இவங்க சொகுசா இருக்கிறதுக்குப் பணம் எங்கிருந்து வருகுது?

அதுதான் பணத்தோட்டம் வைத்திருக்கிறார்களே அங்கிருந்துதான் பணம் ஏராளமாக வருகிறது!"

" இந்தப் பணத் தோட்டத்தை, இவங்க எப்படி உண்டாக்கினாங்க?"

" அதுதான் எனக்கும் தெரியவில்லை!"

"ஏன் வேல்விழி, நம்ப குடிசையூரிலே கூட, இந்த மாதிரிப் பணத்தோட்டம் உண்டாக்கினால், இவங்களைப் போல் நாமும் இருக்கலாமில்லே?"

"உண்மைதான். ஆனால், பணத்தோட்டம் உண்டாக்கும் வழி தெரிய வேண்டுமே?"

இதைக்கேட்ட பசியப்பனிடமிருந்து பெருமூச்சுத்தான் வெளியே வந்தது.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் பசியப்பன் குடிசையூருக்குப் போக விரும்பவேயில்லை. பணத்தோட்டத்தை எப்படிப் படைக்கிறது என்பதை அறிந்து கொண்டுதான் குடிசையூருக்குப் போகவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

இப்போது, பசியப்பன் முற்றிலும் குபேரபுரிவாசியைப் போல் மாறி விட்டான். அதுமட்டுமல்ல, வேல்விழியாளின் காதலனும்கூட. கற்கண்டு நாக்கில் இருந்தால் எப்படி இனிக்குமோ, அப்படி இனித்தது குபேரபுரி வாழ்க்கை பசியப்பனுக்கு.

* * *

பசியப்பன் வீதி வழியே வந்துகொண்டிருக்கும் போது, அவனுக்கு முன்னால், ஒரு சிறு கூட்டம் வேகமாக நடந்து செல்வதும் அவர்களின் பின்னால், நாலைந்து போலீஸ்காரர்கள் போவதும் தெரிந்தது. பசியப்பன் அவர்களை நோக்கி ஓடினான்.

ஒருவனை, நாலைந்து பேர் பக்கம்வர, ஒருவன் இழுத்துக் கொண்டு போனான். அவன் உடலெங்கும் அடிபட்ட காயத்தினால் ரத்தம் கசிந்துக் கொண்டிருந்

தது. அந்த மனிதன் யார் என்று பார்த்தான் பசியப்பன். திகைத்து விட்டான். நமது குடிசையூர்ப் பேர்வழி பாட்டாளியல்லவா! இவனை ஏன் இழுத்துக் கொண்டு போகிறார்கள்? எங்கு கொண்டு போகிறார்கள்? இவன் உடம்பிலே ரத்தம் கசிவதற்குக் காரணம் என்ன? என்ற கேள்விகள் அவன் உள்ளத்தில் எழுந்தன. ஒன்றுமே புரியாமல் அக்கூட்டத்தைப் பின் தொடர்ந்தான். பாட்டாளியும், மற்றவர்களும், குபேரபுரி நீதிமன்றத்துக்கு வந்தார்கள். கோர்ட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டான் பாட்டாளி.

கோர்ட்டுக்குள்ளே ஜனங்கள் நிறைந்திருந்தனர். பசியப்பனும் போய் ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டான். அவன் விவரத்தை அறிய துடிதுடித்துக் கொண்டிருந்தான். பாட்டாளி கூண்டில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். சிறிது நேரத்துக்குள் நீதிபதியும் வந்து தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

நீதிபதி: இவர்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றச் சாட்டு என்ன?

சர்க்கார் வக்கீல்: குபேரபுரி வாசியான திருவாளர் உல்லாசத்தின் வீட்டில், இந்த கூண்டில் நிற்கும் பாட்டாளி, ஒரு மூட்டை நெல்லைத் திருடிக்கொண்டு சென்று விட்டான். இதைக் கண்ட உல்லாசம் அவனைப் பின் தொடர்ந்து ஓடினார். இவன் நெல் மூட்டையைக் கீழே போட்டு விட்டு, உல்லாசத்தைத் தாக்கினான். உல்லாசத்தின் சத்தம் கேட்டு, அவருடைய ஆட்கள் வந்து பாட்டாளியைப் பிடித்துக் கொண்டனர். பிறகு இங்கு கொண்டுவரப்பட்டான். திருடியது

முதல் குற்றம்; தாக்கியது இரண்டாவது குற்றம். இந்த இரண்டு குற்றச்சாட்டுகளும்தான் இவன் மேல் உள்ளவை.

நீதிபதி : வாதியைக் கூப்பிடும்.

உல்லாசம் வந்து நின்றார். நீதிபதி அவரைப் பார்த்துச் சில கேள்விகள் கேட்டார்.

" உமது பெயர்?"

" உல்லாசம்!

" இருப்பிடம்?"

" குபேரபுரி!"

சர்ககார் வக்கீல் சொன்னது அத்தனையும் உண்மைதானே?"

" ஆமாம், அத்தனையும் உண்மையே!"

" சரி, நீர் உட்காரும்!"

திரு. உல்லாசம் தனது இடத்திற்போய் உட்கார்ந்ததும், நீதிபதி, கூண்டில் நிற்கும் பாட்டாளியைப் பார்த்தார்.

" உமது பெயர்?"

" பாட்டாளி!"

" ஊர்?"

" குடிசையூர்."

" உம்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தை நீர் ஒப்புக்கொள்கிறீரா?"

" ஆம்! ஆனல் குற்றமல்ல! கேளுங்கள். கேட்ட பிறகு சொல்லுங்கள், நான் செய்தது குற்றந்தான என்று. உல்லாசத்தின் பண்ணையில் வேலை செய்

பவன் நான். நாள் முழுதும் பண்ணையில் பாடுபட்டு விட்டு என் ஊரான குடிசையூருக்குப் போவேன். அங்கு பட்டினித் தோட்டத்தில் படுத்து விடுவேன். சாப்பாட்டுக்கு இல்லாமலிருந்தாலும் அதைப் பொருட் படுத்தாமல் வேலை செய்தேன். இந்த வருஷம் நல்ல விளைச்சல். ஆயிரம் மூட்டை நெல் உல்லாசத்தின் களஞ்சியத்தில் சேர்ந்தது. ஆனால், எனக்குத் தர வேண்டிய கூலியைச் சரிவரத் தரவில்லை. அரையும் குறையுமாகக் கொடுத்தார் உல்லாசம். அதுவும் நான் பட்ட கடனுக்குப் போய்விட்டது. என் மனைவி கர்ப் பவதி. அவளைப் பசி தாங்காது பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால், வீட்டிலோ ஒரு மணி அரிசி கூட இல்லை. அன்று பட்டினித் தோட்டத்தில் நான் படுத்துவிட்டேன்; அவளும் படுத்துவிட்டாள். அங் கிருந்து கொண்டு ஏக்கம் கலந்த பார்வையை என்மீது வீசினாள். என்னால் பொறுக்க முடியவில்லை. உல் லாசத்திடம் ஓடி வந்தேன். என் நிலைமையைச் சொல்லி உதவி கேட்டேன். அசைந்தானில்லை. ஒரு கலம் நெல் கொடுங்கள். கூலியில் பிடித்துக் கொள் ளுங்கள் என்று மன்றாடினேன். காலில் விழுந்தேன் பண்ணையின் இரும்பு நெஞ்சம் இளகவில்லை. கடைசி யாக ஐந்து படி நெல்லாவது கொடுங்கள் என்று கேட் டேன். எனக்காகவல்ல; கர்ப்பிணியாயிருக்கும் என் மனைவிக்காக. 'இல்லை' யென்ற பதிலே இந்த உல் லாசத்திடமிருந்து வந்தது. எனக்கு ஆத்திரம் பொத் துக்கொண்டு வந்தது. ஒன்றும் பேசாமல் களஞ்சி யத்தை நோக்கி நடந்தேன். அங்கே அடுக்கிவைக்கப்பட் டிருந்த நெல் மூட்டைகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு நடந்தேன். பின்னால் கத்திக் கொண்டே வந்தார்

உல்லாசம். நான் நெல் மூட்டையைக் கீழே போட்டு விட்டு திரும்புவதற்குள் 'ஏண்டா, நெல் மூட்டையைத் திருடிக் கொண்டு ஓடுகிறாய்? என்ன திமிரு!' என்று சொல்லிக்கொண்டே கையில் வைத்திருந்த தடியால் அடித்தார். அவ்வளவுதான் நானும் கையை வைத்தேன். உல்லாசம் தன் ஆட்களை அழைத்தார். அவர்களும் வந்தார்கள். உடலிலே ரத்தம் வரக்கூடிய மாதிரி அடித்தார்கள்."

நீதிபதி: நெல் மூட்டையைத் திருடியது குற்றந் தானே?

பாட்டாளி: குற்றமா! வருஷம் பூராவும் உழைத்துக் கொடுத்தேன். அதற்குப் பிரதியாக, ஆறுமாசமாவது அரைவயிற்றுக் கஞ்சி குடிக்கக் கூடப் போதுமான கூலி கொடுக்கவில்லை! நான் இனாமாகவா இவரிடம் கேட்டேன்? இல்லை. கூலிக்காக நெல்லைக் கேட்டேன். என் உழைப்பைக் காட்டிக் கடனாவது கொடுங்கள் என்று கேட்டேன். எனக்காக அல்ல, கர்ப்பிணியாக இருக்கும் என் மனைவிக்காகக் கேட்டேன். இந்த உல்லாசத்துக்கு இதயமே—நெஞ்சமே இல்லை போலும்! முடிவில், நானாக ஒரு மூட்டை நெல்லை எடுத்தேன். இது குற்றமா? நெஞ்சே இல்லாத ஒரு மரத்த மனிதரிடமிருந்து—என் ரத்தத்தை உறிஞ்சிக் கொழுப்பவனிடமிருந்து ஒரு மூட்டை நெல்லை எடுத்தது குற்றமென்றால்—திருடு என்றால்—என்போன்ற குடிசையூராரின் உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கும் இக் குபேரபுரி வாசிகள் அத்தனை பேரும் திருடர்கள் கொள்ளைக்காரர்கள்....?

நீதிபதி : இது கோர்ட் என்பதை நினைவூட்டுகிறேன் !

உல்லாசம் : கனம் நீதிபதியவர்களே என்னை மட்டுமல்ல, குபேரபுரியையே அவமானமாகப் பேசுகிறான். வார்த்தையைத் தடிக்கவிட்டுப் பேசுகிறான்.

பாட்டாளி : நானா? என் வார்த்தைகளிலா தடிப்பு? உன் சொற்களில்தான் கொழுப்பு ! உல்லாசம் நீ கொழுக்கிறாய் ; நான் மெலிகிறேன். நான் இல்லாவிட்டால் நீ வாழமுடியாது. ஏன், குடிசையூர் இல்லாவிட்டால் குபேரபுரியே வாழமுடியாது. இதை எண்ணிப் பார்க்கமாட்டேன் என்கிறது. குபேரபுரி பணத் தோட்டத்திலே பஞ்ச சுவைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் உல்லாசங்கள் பாட்டாளிகளுக்குத் தக்க முறையில் உணவு கொடுத்தால், தன் நவசுவைக்கு நட்டம் வந்துவிடும் என்று எண்ணுகிறது. பாட்டாளியை ஏறிட்டுப் பார்த்து விட்டு, அப்புறம் எக்காளமிட்டுச் சிரிக்கிறது. பிறகு எட்டி உதைக்கிறது ; உதவிக்காகக் கையேந்திக் கொண்டிருக்கும் பாட்டாளியை—பட்டினித் தோட்டத்திலிருந்து கண்ணீருடன் வந்து நிற்கும் பாட்டாளியை ஏளனப்படுத்தி விரட்டியடிக்கிறது. இந்தக் கொடுமை சட்ட ரீதியாக—சாஸ்திர ரீதியாக—தெய்வ நீதியாக—பரம்பரை பரம்பரையாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை உலகத்தை விட்டு ஒழியவேண்டும். இல்லாவிடில் குடிசையூரிலிருந்து வருபவன் சிணுங்கிக்கொண்டு வரமாட்டான். சீறிக்கொண்டுதான் வருவான்.

நீதிபதி கனைத்தார். அவர் கண்கள் ஏளனப் பார்வையுடன் பாட்டாளியைப் பார்த்தன. இதற்கு இடையே கோபத்துடன் எழுந்தார் உல்லாசம்.

"கனம் நீதிபதியவர்களே வாய்த் துடுக்காகப் பேசும் இவனைச் சும்மாவிடக்கூடாது. திருட்டுக் குற்றத்தையும் செய்துவிட்டுத் திமிருடன் பேசும் இவனுடைய தைரியத்தைப் பார்த்தீர்களா? குபேரபுரிக்கே அவமானத்தைச் சூட்டுகிறான், கோர்ட்—நீதிபதி—உயர்ந்த அந்தஸ்துள்ளவர்கள்—என்பதை யெல்லாம் மறந்து பேசும் இவனை ஒழித்துக் கட்டிவிட வேண்டும். நமது இன்பத்துக்கே நஞ்சு போன்ற...."

முடிக்கவில்லை உல்லாசம்—பாட்டாளியின் வாயிலிருந்து தீயை அணைத்துக் கொண்டு புறப்பட்டன வார்த்தைகள்.

"என்னையா ஒழிக்க வேண்டுமென்கிறாய்? என்னையா ஓட்டவேண்டு மென்கிறாய்? நீதான் ஒழிக்கப் பட வேண்டியவன்! துரத்தியடிக்கப்பட வேண்டியவன்! நீதான் ஓடவேண்டும் இந்த உலகத்தை விட்டு. ஆம், இந்த உலகத்தைவிட்டு ஓடிப்போ! எங்கேயாவது ஓடிப்போ! உன்னால் மக்கள் அடைந்த துன்பங்கள் போதும். மாண்பை மறந்து தங்களுடைய வாழ்க்கையைத் துறந்து ஊமைச் சத்தம் போடும் உழைப்பாளர்கள் அல்லலுற்றது போதும். தீமைகளின் கூட்டுறவான நீ, தொலைந்துவிடு! என் கைகளில் முறுக்கேறு மட்டும்—உடலிலே ரத்தம் கொதிப்பேறுமளவுக்கு—உணர்ச்சி குமிழ்விடும் வரைக்கும்—உள்ளத்திலே பழிவாங்கும் எண்ணம் தலையெடுக்கும் வரைக்கும்

நீ நிற்காதே! நீயாகவே தொலைந்து விடு! ஓடிவிடு! இல்லையேல்....!"

கோர்ட்டில் ஒரே பரபரப்பு! நீதிபதி "அமைதி! அமைதி!" என்று கத்தினர். உல்லாசத்தின் கண்களிலே ஒருவித ஒளி மின்னி மறைந்தது. பிறகு கலகல எனச்சிரித்தார். அவர் சிரிப்பைக் கண்ட பாட்டாளி,

"சிரி! நன்ருகச் சிரி. கடவுள்; காசு—மதம், சாஸ்திரம் இவைகளும், இன்னும் அநேக அதிகாரக் கூட்டுகளும் சேர்ந்த உருவல்லவா நீ, சிரிக்கத்தான் செய்வாய், சிரி!"

உல்லாசத்தின் புருவம் சுருங்கியது. நீதிபதியைப் பார்த்தார். அவர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தவர், முகத்தைத் தூக்கி உல்லாசத்தைப் பார்த்தார். அந்தப் பார்வை என்ன சொல்லிற்ருே—!

ஒரு ஏளனப் புன்னகை உல்லாசத்தின் வாயில் நெளிந்தது.

"என்னை ஒழிந்துபோ என்று கூறுவதற்கு நீ யார்?"

இக்கேள்வியைக் கேட்டு விட்டு மிடுக்காக நெஞ்சை உயர்த்திப் பாட்டாளியைப் பார்த்தார் உல்லாசம். பாட்டாளியின் கண்களில் கனல் தெறித்தது. எரித்து விடுபவன் போல் பார்த்துக் கொண்டே,

"என்னை யார் என்று கேட்கிருய்? உனக்குத் தெரியாதா? தெரியும்! எனினும் கேட்கிருய். உன் ஆட்சி—உன் எஜமானின் ஆட்சி—ஆழத்தில் நாட்டப்

பட்டிருக்கிறது என்ற தைரியத்தில் கேட்கிறாய், நீ யாரென்று. சொல்கிறேன் கேள்!"

பரலோக ராஜ்யத்தைக் காட்டி பட்டினி போடும் மதத்தின் கீழ் மடையர்களாகி, மனித உணர்ச்சியின்றி பட்டினித் தோட்டத்திலே மாண்டு கொண்டிருக்கும் பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதி நான்!

அறுவடையை உனக்குக்கொடுத்துவிட்டு, வற்றிய வயிரோடு வானத்தை அண்ணாந்து பார்த்து விட்டுப் பட்டினித் தோட்டத்தில் படுத்துக்கிடக்கும் பல்லாயிரக் கணக்கானவர்களில் ஒருவன் நான்!

பட்டாடைகளை அளித்து விட்டு பல பொத்தல்களை கொண்ட பழைய துணிகளை உடம்போடு ஒட்ட வைத்துக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கானவர்களில் ஒருவன் நான்!

பசும் பொன் தட்டுகளில் பழங்களுடன், பஞ்சணை நோக்கி வரும் பளிங்கு போன்ற பாவைகளோடு பரவசத்துடன் படுத்து ஆனந்தம் கொள்ளும் உன்னைப் போன்ற பரமன்களின் வாழ்வுக்கு அத்திவாரமாயுள்ள கோடிக் கணக்கானவர்களில் ஒருவன் நான்!

கடலிலும், தரையிலும், சுரங்கங்களிலும், வயல்களிலும், கல்லிலும் முள்ளிலும் மண்ணைப் பொன்னாக்கிக் கொடுத்து விட்டு, ஓட்டை வீடுகள் நிறைந்து கிடக்கும் குடிசையூரை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் எண்ணற்றவர்களில் ஒருவன் நான்!

" கடவுள்—மதத்தால்—கோயில்களால்—சுரண்டல்களால் ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, வாழ்க்கையை

உடைந்த பாலமாக்கி—முட்புதற்கள் கொண்ட காடாக்கிதந்த உன்னுடைய மூல உருவத்திலே—அரக்கத் தன்மையிலே—சிக்கிச் சிதைந்து சீரற்றுக்கிடந்து, கடைசியாகச்சீறும் பாம்பென வந்திருக்கும் பட்டினித் தோட்டத்தின் படைத்தலைவன் நான்!"

கோர்ட்டிலே மீண்டும் பரபரப்பு-அங்கு கூடியிருந்தவர்களின் முகத்திலே, ஒருவிதத் துடிப்பு! இச் சமயத்திலே ஒரு சேவகன் வியர்க்க, விறு விறுக்க நீதிபதியை நோக்கி ஓடி வந்தான். அவனிடம் விஷயத்தை விசாரித்தார் நீதிபதி. குடிசையூர் ஜனங்கள் ஏராளமாகக் கோர்ட்டின் முன் கூடிவிட்டதாகவும் அவர்களின் கூச்சல்களையும், ஆத்திரங்கலந்த பேச்சுக்களையும் பார்த்தால் பயமாக இருக்கிறது என்றும் கூறினன். இதைக் கேட்ட நீதிபதிக்கு அங்கமெல்லாம் ஆடியது. கோர்ட்டிலிருந்தவர்களின் முகமெல்லாம் வெளுக்க ஆரம்பித்தன.

இதை யெல்லாம் கண்ட பசியப்பனுக்கு ஒன்றுமே புரியவில்லை. குடிசையூர் ஜனங்கள் என்றதும் உள்ளத்தில் ஒரு பரபரப்பு உண்டாயிற்று. ஆனல், வெளியே போய் என்ன விஷயம் என்று பார்க்க அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. குபேரபுரியே ஒரு புதிர் போன்றிருந்தது. 'என்ன நடக்கிறது பார்ப்போம்' என்று உட்கார்ந்திருந்தான்.

நீதிபதி, இன்ஸ்பெக்டரைப் பார்த்தார். அந்தப் பார்வை ஏதோ சொல்லிற்று. உடனே துள்ளி எழுந்து வெளியே சென்றூர் இன்ஸ்பெக்டர்.

கோர்ட்டுக்கு வெளியே குடிசையூர் வாசிகள் குழுமி நின்று கொண்டு "நீதி வேண்டும்! உணவு வேண்டும்! பாட்டாளியை விடுதலை செய்!" என்று கத்திக் கொண்டிருந்தனர். போலீஸ்படை தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தை கலைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், வர வர கூட்டம் பெருகிக் கொண்டே வந்தது. கடைசியில் சமாளிக்க முடிய வில்லை. கோர்ட் கட்டிடத்தையே இடித்து விடுவார்கள் போலிருந்தது. வானத்தை நோக்கி, போலீசாரின் துப்பாககிக் குண்டுகள் பறந்தன. ஒரே ஆத்திரம், ஆரவாரம், கொந்தளிப்பு!

ஆட்சி மன்றத்துக்கு டெலிபோன்கள் பறந்தன. முதல் அமைச்சர் முதலாளித்துவ முதலியார் தன் சக அமைச்சர்களை அழைத்து ஆலோசனை நடத்திவிட்டுப் பிளஷரில் பறந்து வந்தார் கோர்ட்டை நோக்கி. முதலாளித்துவ முதலியாரைக் கண்ட குடிசையூர் வாசிகள் கொதித் தெழுந்தனர். இதற்குள் போலீ ஸாரின் உதவியால் கோர்ட்டின் முன் வாசலில் வந்து படிக்கட்டில் ஏறி நின்றார். கோர்ட்டுக்குள்ளிருந்த நீதி பதி, வக்கீல்கள், மற்றவர்கள் எல்லோரும் முதன் மந்திரியின் பின்னால் வந்து நின்றனர். முதன் மந்திரி பேசலானார்.

"நீங்கள் ஏன் கூச்சல் போடுகிறீர்கள்!?"

"எங்களுக்கு உணவு வேண்டும்! நீதி வேண்டும்! பாட்டாளியை விடுதலை செய்ய வேண்டும்!" என்று கூட்டத்திலிருந்து சத்தம் கிளம்பியது.

கூச்சல் போடாதீர்கள். எல்லாம் எங்களுக்குத் தெரியும். உங்கள் கோரிக்கைகளைக் கவனிப்போம். நீங்கள் அமைதியாகப் போங்கள்.'' என்று முதலாளித்துவ முதலியார் சொல்லி முடித்ததும் கூட்டத்திலிருந்து, ஒருவர் வேகமாக முதன் மந்திரியை நோக்கி வந்தார். அவர் கண்களில் ஒளி சுடரிட்டது. முதன் மந்திரி அவரைப் பார்த்து.

" அங்கேயே நின்று பேசும்!'' என்றார்.

" ஆம் அருகில் வரக்கூடாது! அதிருக்கட்டும் நாங்கள் அமைதியாகத் திரும்பிச்செல்ல வரவில்லை, அல்லது கூச்சல் போடவுமில்லை. எங்கள் குடிசையூருக்கும் பட்டினித் தோட்டத்துக்கும் ஒரு முடிவு தேடவந்திருக்கிறோம்."

" என்ன முடிவா ? "

" ஆம் முடிவு. ஒரே முடிவு; அந்த முடிவின் விளைவிலேதான் இருக்கிறது வாழ்வு! "

" இதற்கிடையில் இன்ஸ்பெக்டரின் காதில் ஒருவன் எதையோ ரகசியமாகக் கூறினான். இன்ஸ்பெக்டர் அதைக்கேட்டு முதன் மந்திரியிடம் ஏதோ சொன்னார். அதைக்கேட்ட முதலாளித்துவ முதலியாரின் வாயில் புன்முறுவல் உண்டாயிற்று."

உடனே அந்த மனிதரைப் பார்த்துக் கேட்டார்.

" நீர் குடிசையூர் வாசியல்லவே ? "

"நான் குடிசையூர் வாசிதான். இப்போது அதன் அருகே உள்ள மார்க்ஸூரில் இருக்கிறேன்.

" உமது பெயர் ?"

" புரட்சிப் பித்தன் !"

" உமது பித்துக்கு உரிமையளிக்க மாட்டோம் ! குடிசையூர் குறைகளை அவர்களே கூறவேண்டும். உமக்கும் அதற்கும் சம்பந்தம் கிடையாது."

" நிறைய இருக்கிறது, தற்போது அவர்களுடைய பிரதிநிதி நான் "

இதற்குள் கூட்டத்துக்குள்ளே யிருந்து " ஆம் அவர் எங்கள் பிரதிநிதி அவருக்குப் பேச உரிமை யுண்டு ! அவர்தான் பேசவேண்டும் !" என்று சத்தம் ஏகோபித்துக் கிளம்பிற்று.

முதன்மந்திரிக்கு யோசனையாகி விட்டது. சிறிது நேரம் ஏதோ ஆலோசனை செய்தார். பிறகு " சரி நாளைப் பொதுமண்டபத்தில் பேசிக் கொள்ளலாம் இப்போது கலைந்து விடுங்கள் " என்றார்.

புரட்சிப்பித்தர் கூட்டத்தின் பக்கம் திரும்பினார்.

" தோழர்களே, பெருமக்களே, எல்லோரும் சென்று நாளை வாருங்கள் !" என்றார். ஜனங்கள் கலையத் துவங்கினார்கள். பசியப்பன் மெதுவாக வந்து புரட்சிப்பித்தனின் முதுகிலே தட்டினான். திடுக்கிட்டுத் திரும்பினார் புரட்சிப் பித்தர்.

" அடே பசியப்பனா ! என்ன ஆளையே அடையாளம் தெரியவில்லையே !"

" ஆமாம் அண்ணே, எல்லாம் புதுசாகத்தானே இருக்குது ! ஆமா, என்ன அண்ணே இந்தக் கூத்தெல்லாம் ? ஒண்ணுமே புரியவில்லையே ?

"எல்லாம் நாளைக்குப் புரிந்துவிடும்!" என்றார் புரட்சிப்பித்தர். அவர் வாயில் புன்னகை நெளிந்தது.

புரட்சிப்பித்தர் விடைபெற்றுக் கொண்டு சென்றதும் பசியப்பனுக்கு அந்த இடத்தில் நிற்கவே மனமில்லை. வேல்விழிக்கு நடந்தவைகளையெல்லாம் சொல்லவேண்டும் என்ற ஆவல் ஆவேசத்துடன் கிளம்பிற்று. வீட்டை நோக்கி ஓடினன்.

மறுநாள் காலை பொதுமண்டபம் பூராவும் எள் போட்டால் எள் விழாத வகையில் ஜன சமுத்திரம் திரண்டிருந்தது. மண்டபத்துக் குள்ளேயும் மக்கள் கடல் குழுமியிருந்தது. மண்டபத்துக் குள்ளே பெரும்பாலும் குபேரபுரி மக்கள்தான் கூடியிருந்தனர். அவர்களுக்கு இடையில் வேல்விழியாளும் பசியப்பனும் அமர்ந்திருந்தனர்.

மண்டபத்தின் மேடையில் முதன் மந்திரி முதலாளித்துவ முதலியார் வந்து அமர்ந்தார். அவருக்கு அருகாமையில் பரலோகமந்திரி பச்சை புளுகரும் உட்கார்ந்தார். அவர்களை அடுத்து அதிகாரிகளும் இதர அமைச்சர்களும் இருந்தனர். ஒரு மூலையில் கோர்ட்டில் விசாரிக்கப்பட்ட பாட்டாளியும் கைவிலங்குடன் நின்று கொண்டிருந்தான். கடைசி வரிசையில் புரட்சிப்பித்தர் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்தில் அமைதி தவழ்ந்து கொண்டிருந்தது.

ஊசி விழுந்தால் கூட ஓசை கேட்குமளவுக்கு மண்டபத்துக்குள் அமைதி அரசோச்சிக் கொண்டிருந்தது. ஒவ்வொருவர் முகத்திலும் என்ன நடக்கப்போகிறதோ என்ற துடிதுடிப்புத் துள்ளிக் கொண்டிருந்தது.

முதன் மந்திரி முதலாளித்துவ முதலியார், புரட்சிப் பித்தரை மேடைக்கு வரும்படி அழைத்தார் அவர் மேடைக்குச் சென்றார்.

மு. முதலியார் : நீர் என்ன சொல்லுகிறீர் ?

புரட்சிப்பித்தர் : நாட்டிலே இருக்கிற குடிசை யூரையும், பட்டினித் தோட்டத்தையும் அழித்துவிட வேண்டும்.

முதலாளித்துவ முதலியார் பக்கத்திலிருந்த பரலோக மந்திரிப் பச்சைப் புளுகரைப் பார்த்தார். அவர் தொண்டையை கனைத்துக் கொண்டு பேசத் துவங்கினார்.

ப. ம : அழித்து விடுவதா ? அது நடக்காத காரியம். சாட்சாத் நாராயணன் அவதாரமான கண்ணன் இருந்தானல்லவா ஒரு காலத்தில் ? அப்போதுகூட இந்தக் குடிசையூரும் பட்டினித் தோட்டமும் இருக்கத் தான் செய்தன. கண்ணன் அவைகளை அழிக்க விரும்பவில்லை. கடவுள் அவதாரமான ராமச்சந்திர மூர்த்தி ஆண்டாரல்லவா அயோத்தியை, அங்கேகூட.

பு. பி : அலறினர் மக்கள் உணவில்லாது. அவர்கள் பஞ்சமர்கள் என்னும் பாட்டாளிகளாக யிருந்து பட்டினித் தோட்டத்தில் தான் பழிக்கவேண்டி யிருந்தது. பணத்தோட்டத்திலல்ல, தெரியும்.

ப. ம : காட்டை நாடாக்கும் சக்தி—களஞ்சியத்தை உண்டாக்கும் ஆற்றல்—வானத்தைப் பார்த்தாலே மழை பொழியும் மாண்பு—

பு. பி: பஞ்சமா? பட்டினியா? இதோ பறந்தது' மக்கள் கஷ்டங்களும் தீர்ந்தது—என்று செய்யக்கூடிய தவோபலம் வாய்ந்த முனிவர்கள்கூட இருந்தார்கள். அப்போதும் குடிசையூரும் பட்டினித்தோட்டமும் இருந்தன. அம்முனிவர்கள் பார்த்துக் கொண்டுதானிருந்தனர். அவைகளை அழிக்கவில்லை என்கிறீர்கள் அப்படித்தானே?

மு. ம: ஆம் அஹிம்சா மூர்த்தி அசோகன் ஆண்டான் அப்போது?

பு. பி: இருந்தன இரண்டும்.

மு. ம: அரசியல் அறிஞன் அக்பர் அரசோச்சினுன் அப்போது?

பு. பித்தர்: இருக்கத்தான் செய்தன அழிக்கப்படவில்லை!

மு. மந்திரி: ஆங்கிலேயன் ஆண்டான் அப்போது.

பு. பித்தர்: குடிசையூரும் பட்டினித் தோட்டமும் அப்படியே யிருந்தன, அழிக்கப்படவில்லை.

ப. ம: ஏன், அரசியல் ஞானி, ராஜ தந்திரத்தின் உறைவிடம், அனைத்தையும் அறிந்த மேதாவி சாணக்யர், சந்திரகுப்தனை கொண்டு அரசாண்டாரே அப்போது கூட பட்டினித் தோட்டமும், குடிசையூரும் இருந்தன. அழிக்கப்படவில்லை! நீர்தான், புதுமையாகச் சொல்கிறீர் இவைகள் எடுத்தெறியப் படவேண்டும் என்று. என்ன விந்தை!

பு. பித்தர் : விந்தையல்ல, வேதனை! அப்போது, மட்டுமல்ல, எப்போதும், எங்கும் இருந்தார்கள் பசியப் பர்கள். நீங்கள் குறிப்பிட்டவர்களின் கோலோச்சுதல் நடக்கும் போதும், உழைத்து, உழைத்து ஓடாய்ப் போனவர்கள் பட்டினித் தோட்டத்திலே மயங்கிக் கிடந்தார்கள். வேதம் ஓதி வேள்வி செய்தார்களே புராண காலத்து அரசர்கள், அப்போதும் குடிசை யூரும் பட்டினித்தோட்டமும் இருந்தன. பாட்டாளி களும் நடுத்தர வகுப்பினரும் அங்கே யிருந்தார்கள். நாடகங்களில் 'மந்திரி! நம் நாட்டிலே மாதம் மும்மாரி பெய்கிறதா?' என்ற கேள்வியும், 'ஒரு மாரியும் பெய்ய வில்லை மகாராஜா, குடிபடைகள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள்' என்றபதிலும் சொல்லப்பட்டன வல்லவா? இக்கேள்வியும், பதிலும், நடமாடும் காட்சிகளாக அந் தக்காலத்திலுமிருந்தன. ஆனால், அரசர்களின் அந் தப்புரங்களிலும் அரண்மனைப் பிரபுக்களின் இல்லங் களிலும் இன்பத்தேன் ஆறுபோல் ஓடிக்கொண்டுதா னிருந்தது.

புரட்சிப் பித்தர் பேசிக்கொண்டேபோனார். சபை யிலுள்ளவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. அவர்களின் விழிகள் ஆடாது அசையாது புரட்சிப்பித்தரையே பார்த்துக்கொண்டிருந்தன. தொடர்ந்து பேசிக்கொண் டிருந்தார் புரட்சிப்பித்தர்.

"மகாராஜாக்கள் மாணிக்கங்களைக் குவித்தார் கள். நவரத்தினங்கள் அவர்களுடைய சிம்மாசனங் களிலே பதிக்கப்பட்டிருந்தன. பட்டாடைகள் உடலை மூடிக் கொண்டிருந்தன. அறுசுவை உண்டிகள் உண்

ணுவதற்கு — அந்தப் புரத்தில் அழகான அணங்குகள் ஆடிப்பாட — கூடிக்குலாவ, தர்பாரிலே பாவலரும் நாவலரும் சூழ விருப்பார்கள். போர் வீரர்களோ உடைவாளை எந்நேரமும் எடுக்கத் தயாராக இருப்பார்கள். வேந்தனின் வாக்கோ வேதவாக்கு. அவன் குரு, ராஜகுருவின் கட்டளையே கடவுள் கட்டளை. இந்நிலையில் மன்னர்கள்! மக்களால் — குறிப்பாகத் தரித்திர நாராயணர்கள் என்று பட்டம் சூட்டப்பெற்ற பாட்டாளிகள் — என்ன செய்து கொண்டிருந்தார்கள்? உழைத்தார்கள், உழைத்தார்கள், உடல் ஓயமட்டும் உழைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், உண்ண உணவில்லை—கிடைக்கவில்லை, பட்டினித் தோட்டங்களில் படுத்துறங்கினார்கள். உம்முடைய ஆட்சி, மன்னர் உருவிலே நடந்தபோது இந்த நிலை—அதுமட்டுமா, அரசன் ஆடலழகியை அணைத்து அவள் இதழ்களிலே ஊறி நிற்கும் தேனை உறிஞ்சிக் கொண்டிருப்பான். அதே நேரத்தில், அந்த அழகியின் கழுத்தில் தொங்கும் முத்துக்களுக்காக கடலில் மூழ்கிக் கொண்டிருப்பான் தொழிலாளி. முதலாளித்துவ முதலியாரே நீர் படைத்திட்ட பிரபுக்கள் அந்த அரசனின் வேலைகளைச் செய்கிறார்கள், வேறு மாற்றமில்லை. இப்போதும் ஒரு அரசனின் இன்பக் கேளிக்கைக்காக இருக்கும் அழகியின் இதழ்களிலே ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒரு தொழிலாளியின் உயிர். இன்னும் கேளுங்கள்! பிரபு ஒருவன் பொற்கொடி ஒருவளுடன் பொற் கிண்ணத்தில் இருக்கும் மதுவை அருந்திக் கொண்டிருப்பான். அந்தச் சிங்காரியின் கையால் பாலையும் பழத்தையும் சாப்பிட்டுக் கொண்டிருப்பான். அதே நேரத்தில்,

பட்டினித்தோட்டத்திலே, மாட்டுத் தொழுவத்திலே பாடுபட்டுக் கொண்டிருப்பான் பாட்டாளி.

மு. ம : அதற்கென்ன செய்கிறது! அவரவர்கள் பிறந்த வேளை — அது கடவுளின் கட்டளை!

பு. பி : அப்படிக் கூறும் மதகுருகூட மந்த காசத்துடன் பரமனுடன் பேசிக் கொண்டிருப்பார். கண்களை மூடியபடியே! அதை ஆச்சரியத்துடனும், பய பக்தியுடனும் பார்த்துக் கொண்டிருப்பார்கள், பிள்ளை வரம் வேண்டி வந்த பிரபுக்களும் சீமாட்டிகளும். குருவின் முன்னால் குவிக்கப்பட்டிருக்கும் காணிக்கைப் பொருட்களின் மதிப்பு — நிறை—

திராட்சை, ஆப்பிள், வாழை, மாதுளை, ஆரஞ்சு, பால் கற்கண்டு....சந்தனம், பன்னீர், அத்தர், புனுகு, ஜவ்வாது....இவை யிருக்கும். குருவின் கழுத்திலே இரத்தினங்களால் இழைக்கப்பட்ட உருத்திராட்சம்— மின்னும் பட்டுத்துண்டு மேனியிலே — பசும்பொன்னாலான பாதக்குறடு – இவைகளின் ஒரு பகுதி, சில உருவிலே எதிரே வந்து நிற்கும் இரவிலே! குரு, கோமளாங்கி ஒருத்தியுடன் 'கோலாகலத்தில்' மூழ்கி யிருப்பார். 'ஒரே பிருந்தாவனமாக' இருக்கும் அந்த இரவு! இதே சமயத்தில். குருவின் இந்தக் கொண்டாட்டத்துக்கும், கோலாகலத்துக்கும் மூலகாரணமாயுள்ள பாட்டாளி, பகல் முழுதும் பாடுபட்டு உழைத்தும் உண்ண உணவில்லாது பசி வயிற்றைக்கிண்ட, பரிதாபத்துடன் படுத்திருப்பான் பட்டினித் தோட்டத்திலே அவன் கருத்திலே கடவுள் நினைவுதான் ஓடும். சீர்

சொன்ன அந்த 'அவரவர் பிறந்தவேளை' என்ற எண்ணம் சுழலும். அவன் கண்களில் கண்ணீர்தான் தேங்கி நிற்கும் அப்போது. ஆனால் அந்தக் காலங்களிலே புரட்சிப் பித்தர்கள் கிடையாது; 'மார்க்ஸூர்'களும் இருக்கவில்லை. எனவே, குடிசையூர்கள் கொளுத்தப்படவில்லை; பட்டினித் தோட்டங்கள் படுகுழிக்குள் தள்ளப்படவில்லை. இந்த முதலாளித்துவ முதலியாரின் ஆட்சியால் உலகத்தில் வேதனை, வெறுப்பு, விதைக்கப்பட்டு, மிகச்செழிப்புடன் வளர்ந்திருக்கின்றன. இந்த ஆட்சி ஒழியா விட்டால், உலகத்திலே அமைதியே இராது! வேதனைக்குரல் — பரிதாப ஓலம் — விழிகளில் சொட்டு விழும் நீர்—நோயின் உபாதை தாங்காது அலறும் உணர்வு — மூடத்தனத்தின் மோசத்தனத்தால் முடங்கிக்கிடக்கும் அறிவு — இந்த விதமான — இதயத்தை நெக்குருகச் செய்யும் காட்சிகளைத் தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கும் பட்டினித் தோட்டங்கள் அழிக்கப்பட வேண்டும் என்பது மனித உணர்ச்சி! ஆள்வோரா யிருந்தாலும், அல்லது அவர்களை ஆட்டிப் படைப்போரா யிருந்தாலும். அல்லது அவர்களின் ஆண்டவனாயிருந்தாலும் சரி, குடிசையூர்களில் இருக்கும் பட்டினித் தோட்டங்களைப் பார்க்க மாட்டேன் என்கிறார்கள். உலகத்துக்கே இவைகள் அவமானச் சின்னங்கள்; நாகரீகத்துக்கு ஒரு சவால்; முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகள்; முதலாளித்துவத்தின் மோசத்தனத்துக்கு அத்தாட்சிகள்!

மு. மந்திரி: என்ன, என்ன மோசத்தனத்துக்கு அத்தாட்சிகளா?

பு. பித்தர் : ஆம், பாரின் நாகரீக வாழ்வுக்குப் படிக்கட்டமைத்துத்தந்த பாட்டாளி வர்க்கத்துக்குப் பட்டினித் தோட்டத்தைப் பரிசாகக் கொடுத்து விட்டு, பணத்தோட்டத்திலே உல்லாசச் செடிகளை நட்டு, இன்பப்பூக்களைப் பறித்துக் களிக்கிறீர்கள். நீரும், உமது குபேரபுரியார்களும். இந்த நெஞ்சவிந்த அநியாயத்துக்கு நீர்தான் பொறுப்பாளி என்பதில் என்ன தவறு? குபேரபுரிக்கும், பணத்தோட்டத்துக்கும் மூல காரணஸ்தர்களின் அவஸ்தையை நீர் எண்ணிப் பார்த்தீரா? வயலிலே உழைக்கும் விவசாயி—இயந்திரங்களிலே சுழலும் தொழிலாளி — இதர கூலிப் பாட்டாளிகள் — இவர்களின் வாழ்க்கை மலர்த்தோட்டமாகவா இருக்கிறது? இன்பப் பூங்காவாகவா இருக்கிறது? உடலைப் பட்டையாக்கி, நரம்புகளைக் கயிராக முறுக்கி, இரத்த நீர் பாய்ச்சிப் பணத்தோட்டத்தை வளர்க்கப் பாடுபடுகிறார்கள், அவர்கள்! ஆனல், நீங்கள் கொடுக்கும் பரிசு பட்டினித் தோட்டம்! பணத்தோட்டத்தின் சொந்தக்காரர்களான நீங்கள், உங்களின் பல வித உல்லாசங்களுக்கும், விநோதங்களுமாக குடிசை யூரை வைத்திருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் அடித்தட்டுக் கற்கண்டாக, அதன் அடுக்குகள் பாலும் பழமுமாக நிரந்தரமான முறையில் இருப்பதற்காக இந்தக் குடிசையூரையும், பட்டினித் தோட்டத்தையும் அழிக்காமல் வைத்திருக்கிறீர்கள். அழிந்து போகாமல் காப்பாற்றி வருகிறீர்கள்.

பணத்தோட்டத்துக்கு முன்னல் பட்டினித் தோட்டத்தை வைத்துப் பாருங்கள். என்ன காணலாம்! இங்கே விருந்து; அங்கே வேதனை.

இங்கே தென்றல்; அங்கே புயல். இங்கே பன்னீர்; அங்கே கண்ணீர். இங்கே சுவை; அங்கே சோகம். இங்கே நிலவு; அங்கே இருட்டு. இங்கே இச் என்ற முத்தத்தின் ஓசை; அங்கே பளார்' என்று கன்னத்தில் அடிவிழும் சத்தம். இவ்வளவிற்கும் நீங்கள் உடல் ஆடாமல் இருக்கிறீர்கள். அவர்கள் உழைக்கிறார்கள். இந்த விநோதமான நிலை எனக்கு வேதனையைக் கொடுத்தது. சிந்தித்தேன் ஒரு முடிவுக்கு வந்தேன். நாட்டிலே இருக்கும் குடிசையூர்களையும் பட்டினித் தோட்டங்களையும் ஒழித்துவிட்டு வாழ்வூர் அமைத்து அங்கே சமதர்ம தோட்டத்தை உண்டாக்கி இன்பவாழ்வு வாழவேண்டுமென்பதே, அந்த முடிவு. 'மனிதன்' என்ற உயரிய பண்புள்ள எவரும் இப்படியே நினைப்பர்!

புரட்சிப்பித்தர், இந்த இடத்தில் நிறுத்திவிட்டு உட்கார்ந்தார், முதலாளித்துவ முதலியாருக்கு ஆக்ரோஷம் தாங்க முடியவில்லை. வெகுண்டு எழுந்தார்.

"புரட்சிப்பித்தர் என்மீதும், குபேரவாசிகள் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டை வீசுவதுடன், என்னையே — என் ஆட்சியையே — ஒழித்துவிட வேண்டுமென்கிறார். உண்மையைச் சொல்லப்போனால் இந்தக் குடிசையூர் வாசிகள் உயிருடன் இருப்பதற்கு முதல் காரணமே நான்தான். ஆண்டவனால் ஏழைகளாகப் படைக்கப்பட்ட அவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களைக் காப்பாற்றி வருகிறோம். குடிசையூருக்கென எத்தனையோ கோயில்களைக் கட்டினோம், குபேரபுரியில் தயாரிக்கப்பட்ட சினிமாக்கள், நாடகங்கள், புத்தகங்

கள் இவைகளையெல்லாம் அவர்களுக்கு அனுப்பிவைக்கிறோம். ஆனால், புரட்சிபித்தர் ஏதேதோ உதவாத உணர்ச்சிக் குமுறல்களைக் கொட்டுகிறார். பட்டினித் தோட்டம் இருப்பது பரமனின் விருப்பம். அதற்கு நாங்கள் என்ன செய்கிறது? எங்களால் ஆன உதவிகளைச்செய்து கொண்டுதானிருக்கிறோம். ஆனால், பட்டினித் தோட்டத்தையோ, குடிசையூரையே அழிக்க முடியாது. அது ஆண்டவன் படைப்பு. இயற்கையின் சிருஷ்டி....! ஆகவே, குடிசையூர்ச் சனங்கள் புரட்சிப் பித்தரின் பேச்சுக்குச் செவி சாய்க்கக்கூடாது."

முதலாளித்துவ முதலியார் இப்படிப் பேசி முடித்ததும் மண்டபத்துக்குள் கலகலப்பு ஏற்பட்டது. அந்தக் கலகலப்பினூடே புரட்சிப்பித்தர் எழுந்தார். அதைத் தொடர்ந்து அமைதியும் நிலவிற்று. புரட்சிப் பித்தரின் குரல் கணீரென்று ஒலித்தது.

"முதலாளித்வ முதலியார் சொல்கிறார். குடிசையூரும் பட்டினித்தோட்டமும் பரமனின் படைப்பாம்; இயற்கையின் சிருஷ்டியாம்! நான் சொல்கிறேன் இவையிரண்டும் இயற்கையல்ல—செயற்கை—சிருஷ்டி என்று!

மனிதன் சமுதாயமாக வளர்ந்த காலத்திலே ஒரு சிறு கூட்டத்தார் தங்களுடைய தந்திரத்தினால் சேர்க்கப்பட்ட பொருளின் பலத்தைக்கொண்டு வலிமையற்றவர்களின் உழைப்பைச் சுரண்டி உல்லாசமாக வாழ்ந்து வாழ்ந்தார்கள். பரம்பரை பரம்பரையாக இச் சுரண்டலின் உண்மையை உழைப்பாளர்கள் அறியாத வாறு செய்யப்பட்டது முதலாளித்துவ முதலியாரின்

முன்னோர்களால், இதற்கு உறுதுணையாக அப்போதும் இருந்தார்கள் பரலோக மந்திரிகளான பச்சைப் புளுகர் கள்—இப்போதும் இருப்பதைபோல!

* * *

தங்களின் உழைப்புத்தான் குபேரபுரியையும் பணத்தோட்டத்தையும் உண்டாக்கி விட்டிருக்கிறது. ஆனல், அங்கே இருப்பவர்களோ, தங்களைத் துன்பத் திலாழ்த்திக் கொண்டிருக்கிறார்களே — அக்கிரமம் புரி கிறார்களே—பட்டினித் தோட்டத்தில் கிடந்து கஷ்டப் பட வைக்கிறார்களே — என்று குடிசையூரார்கள் உணர்ந்து, குபேரபுரி மீது சீறிப் பாய்ந்து தங்களின் சிங்கார வாழ்வைக் குலைத்து விட்டால் என்ன செய் வது என்ற முன் யோசனையில் தான் கடவுளைக்காட்டி, இவைகளுக்கெல்லாம் காரணம் அவரே — அந்தக் கடவுளே – என்று கூறி கதை கட்டி வந்தார்கள். அந்தக் கதையால் குடிசையூரும், பட்டினித் தோட்ட மும் தொடர்ந்து இருந்து வருகிறது. இப்போது மட்டு மல்ல, முதலாளித்துவ முதலியாரும், பரலோக மந்திரி யும் சொன்னார்களே நாராயணன், கண்ணன், அக்பர், அசோகர் காலம் என்று — அப்போதுகூட இவை யிரண்டையும் இறைவன்தான் படைத்தான் என்று சொல்லி வந்தனர், இவர்களின் முன்னோர்கள்.

அலக்ஸாண்டரின் வெற்றிப்படைகள் அவனி யின் அரைப்பாகத்தை ஜெயித்த நேரத்தில் கிரீசிலே-

சீஸரின் சிரிப்பொலி ரோமை விட்டுவெளி நாடு களிலெல்லாம் கேட்கப்பட்ட நேரத்தில் ரோமிலே—

நெப்போலியனின் வீரவாள் ஐரோப்பாவெங்கும் வெற்றிகரமாகச் சுழற்றப்பட்ட நேரத்தில் பிரான்ஸிலே—

ஹிட்லரின் கால்கள் ஐரோப்பாப் படத்தை மிதித்துக்கொண்டு மாஸ்கோ சென்று கொண்டிருந்த வேளையில் ஜெர்மனியிலே—

குடிசையூர்களும், பட்டினித் தோட்டங்களும் இருந்தன. இந்த வீரர்களின் வரலாற்றைப் புகழ்ந்து எழுதுவதன் மூலமாக அந்நாட்டு பட்டினித் தோட்டச் சித்திரங்களை மறைத்து வந்தார்கள். அப்போதும் இதே பல்லவி—பரமன் படைத்தான் இயற்கையின் சிருஷ்டி என்ற பல்லவி — ராகபாவத்துடன் பாடப் பட்டுவந்தது. ஆனால், இந்தப் பாட்டு பழையதாகி விட்டது இப்போது.

குடிசையூராரின் வியர்வை குபேரபுரியில் பன்னீராக ஓடுகிறது. அவர்களின் ரத்தம் இவர்களுக்குப் பாலாகிறது. சுருக்கமாகச் சொல்லப்போனால் குடிசையூராரின் உழைப்பு குபேரபுரியை வாழ வைக்கிறது. பட்டினித்தோட்டம் பணத்தோட்டத்தை உண்டாக்கியது. ஆனால், முதலாளித்துவ முதலியார் சொல்கிறார் தங்களால்தான் குடிசையூர் வாழ்கிறது என்று. குடிசையூராருக்காகக் கோயில்களும் இதர நன்மைகளும் செய்தார்களாம்! அவர்களுக்காகவா செய்தீர்கள்? இல்லை. உங்களைத் தற்காத்துக்கொள்ள அவைகள் கோட்டைகளாக இருக்கவேண்டிய நோக்கத்துடன் செய்தீர்கள். பசிவந்திடப் பத்தும் பறந்துவிடும்; அதுவும் பட்டினித் தோட்டத்தில் படுத்துறங்கினால் மனிதன் மிருகமாகி

விடுவான் ; உடனே சீறிப்பாய்வான் குபேரபுரியின் மீது. அப்படிக்குடிசையூரார்கள் பாய்ந்தால், குபேரபுரியின் கதி என்னுவது ? ஆகவே அவர்களின் கவனம் குபேரபுரியின்மேல் செல்லாதவாறு அவர்களின் சிந்தனையை வேறு பக்கம் திருப்புவதற்கு கடவுள், மதம், கோயில், கலை, திருவிழா, அது இது என்று சொல்லி அதிலே சொக்கவைத்து விடுகிறார்கள். இது தான் நடந்து வருகிறது. குடிசையூராரின் வேதனைத்தீ குபேரபுரியை அழிக்காதவாறு செய்யத்தான், வேடிக்கை விநோதங்களை அவர்களுக்கேற்ற முறையில் தயாரித்து அவைகளிலே சித்தத்தைச் செலுத்த விடுகிறீர்கள். இந்த உண்மையை அறியாமல் இருந்தார்கள் குடிசையூரார், பணத்தோட்டமும் குபேரபுரியும் தங்கள் உழைப்பல்ல — ரத்தமல்ல — அந்த ஆண்டவன் படைப்பு என்று எண்ணி யிருந்தார்கள். அதாவது நீங்கள் சொன்னதை நம்பி வந்தார்கள். ஆனால், உலகிலே உள்ள நாடுகளிலெல்லாம், மக்கள் உண்மையை உணர்ந்து விட்டார்கள். குறிப்பாக குடிசையூரார் தங்களின் உழைப்பு இதுகாலவரை ஏமாற்றத்துக்குப் பலியாகி, தாங்கள் ஒரு பலனும் அதனால் காணாது குபேரபுரிவாசிகள் அதனால் இன்பம் துய்க்கவும். பணத்தோட்டத்தில் பாங்காக உலாவவும் ஆன நிலையையும் உணர்ந்து விட்டார்கள். உங்களின் இன்பகரமான வாழ்க்கைக்குத் தாங்களே காரணஸ்தர்கள் என்பதைத் தெளிவுற உணர்ந்து விட்டார்கள். குடிசையூரிலிருந்து மார்க்கூருக்கு அடிக்கடி வந்து, அங்குள்ள சிந்தனையாளர்கள் — புதுமை விரும்பிகள் — சமூக விஞ்ஞானிகள் — ஆகியோரின் அறிவுரைகளைக் கேட்டார்கள். அதன் பயன் இது !

குபேரபுரி அமைச்சர் ஒருவர் சொன்னாராம், குடிசையூரே தங்களுடையது தான் என்று. நான் சொல்கிறேன், குபேரபுரியும் பணத்தோட்டமும் குடிசையூரிருக்குச் சொந்தமென்று! இதற்காக அறிவூரின் மக்கள் மன்றத்திலே வழக்காடத் தீர்மானித்து விட்டோம். இதை அறிவிக்கவே, நாங்கள் முக்கியமாக இங்கு வந்தது.

கடைசியாக, இதோ குற்றவாளியாக்கப்பட்டு நிற்கும் பாட்டாளி, விடுதலை செய்யப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன், குபேரபுரியே குடிசையூருக்குச் சொந்தமென்றால், திருவாளர் உல்லாசத்தின் செல்வமும் குடிசையூருக்கே சொந்தம். குடிசையூர் மக்களில் பாட்டாளியும் ஒருவன்,

ஆகவே, உல்லாசத்தின் செல்வத்தில் பங்கு கொள்ள அவனுக்கு உரிமையுண்டு. தவிரவும், உல்லாசத்தின் செல்வம் அத்தனையும், பாட்டாளியின் உழைப்பால் வந்தவை. அது பாட்டாளிக்கே சொந்தம். ஆகவே, உல்லாசத்தின் நெல் மூட்டையை அவன் திருடினான் என்பது நியாயத்துக்கு விரோதமானது. அவன் எடுத்துக் கொண்டு போனான். எனவே, பாட்டாளியை விடுதலை செய்ய வேண்டும் என்று குடிசையூரின் சார்பிலே கேட்கிறேன்......!"

புரட்சிப்பித்தர் பேசி முடித்ததும் உட்கார்ந்தார். சபை முழுதும் முதலாளித்துவ முதலியாரின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தது.

பத்து நிமிஷ நேரம் எதையோ யோசித்தார் முதன் மந்திரி. பிறகு, கனைப்புக் குரலுடன் எழுந்தார்.

"புரட்சிப் பித்தரே, குபேரபுரியின் முதன் மந்திரி என்ற முறையிலும், அவர்களின் பிரதிநிதி என்ற முறையிலும், என் முடிவைச் சொல்கிறேன். உமது கருத்தையும் வேண்டுகோளையும் நாங்கள் நிராகரிக்கிறோம். அறிஞர் மக்கள் மன்றத்தில் வேண்டுமானால் வழக்குத்தொடும். எதிர் வழக்காட நாங்களும் தயாராக இருக்கிறோம். அடுத்ததாக,

பாட்டாளியை விடுதலை செய்யமுடியாது. குபேர புரி நீதி இலாகாவின் சட்டப்பிரிவின்படி, பாட்டாளி திருட்டுக் குற்றத்துக்குள்ளானவன். ஆகவே, அவனை விடுதலை செய்ய எங்கள் சட்டம் இடம் கொடுக்கவில்லை. பாட்டாளியின் விடுதலை, நீர் தொடுக்க இருக்கும் வழக்கின் முடிவைப் பொறுத்தது!" என்று சொல்லிவிட்டு எழுந்தார். சற்று நேரத்துக்குள் சபையும் கலைந்தது.

"கண்டுபிடித்துவிட்டேன்—கண்டு பிடித்துவிட்டேன்." என்ற சத்தம் வந்ததும் புரட்சிப்பித்தர் திரும்பிப் பார்த்தார். பசியப்பன் அவரை நோக்கி ஓடி வந்தான்.

"என்னடா கண்டுபிடித்து விட்டாய்?"

"பணத்தோட்டத்தை உண்டாக்கும் விதத்தை!"

"என்ன பசியப்பனே, நீ சொல்வது....?"

"எல்லாம் அப்புறம் கூறுகிறேன்! இப்போது நீங்கள் ஊருக்கு வரவில்லையா?"

" ஊருக்குத்தான் வருகிறேன் ....!" என்று பேசிக் கொண்டே மண்டபத்தின் வெளியே வந்தார்கள். குடிசையூரார்கள் புரட்சிப்பித்தரின் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றனர். அவர் அவர்களை நோக்கி,

" வழக்குத் தொடரவேண்டியதுதான். நமக்கே வெற்றி. வாருங்கள் போகலாம்!" என்ருர். ஜனத் திரள் குடிசையூரை நோக்கித் திரண்டது.

" பரந்தாமா....! பரந்தாமா!" என்று சத்தம் வந்தது. புரட்சிப் பித்தர் திரும்பிப் பார்த்தார். வேல்விழி கூவிக்கொண்டே வந்தாள். பசியப்பன் அதை காதில் வாங்காதவன்போல் நடந்தான்.

" பசியப்பா அந்தப் பெண் யார், குபேரபுரியாள் மாதிரியிருக்கிறதே ?" என்று புரட்சிப்பித்தர் கேட்டார்.

மெதுவாகத் திரும்பினன் பசியப்பன். இதற்குள் வேல்விழி அவன் எதிரே வந்து விட்டாள்.

பரந்தாமா என்னை விட்டா போகிருய் ?

" பரந்தாமனுக இருக்க விருப்பமில்லை, பசியப்பனுக இருக்கவே விரும்புகிறேன். அதற்காகவே குடிசையூருக்குப் போகிறேன்."

" நான்...?"

"நீ இங்கேயே யிரு! நான் குடிசையூர் போவது விஷயத்தோடு. நான் குடிசையூருக்கு அவசியம் வேண்டியவன்! நீ அங்கு வரவேண்டாம். வேல்விழி அடிக்கடி வருகிறேன் நீ போ!" என்று சொல்லி விட்டு நடந்தான்.

வேல்விழி அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் கண்களில் இரண்டு சொட்டுக் கண்ணீர் திரண்டு, கன்னத்தில் உருண்டன.

முற்றும்.



மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அன்னை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை